விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 235 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 26 திங்கட்கிழமை (11.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## உயிரிழந்த கபில்ராஜின் உடற்கூற்று மாதிரி கொழும்புக்கு சடலம் உறவினர்களிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு முத்தையன்கட்டுப் பகுதியில் இராணுவத்தால் தாக்கப்பட்ட நிலையில் காணாமல்போய் பின் முத்தையன்கட்டுக் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தரான எதிர்மன்னசிங்கம் கபில்ராஜின் (வயது-32) உடற்கூற்றுப் பரிசோதனைகள் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சட்ட

15ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணையைப் புறந்தள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முடிவு

### அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டம்



(கொழும்பு)

பொறுப்புக்கூறல் தொடர்பில் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த வாக்குறுதியின் பிரகாரம் சுயாதீனமான வழக்கறிஞர் அலுவலகம் உருவாக்கப்படும். அதனூடாக உள்நாட்டுப் பொறிமுறைக்கு அமைவாக பொறுப்புக்கூறலுக்கான தீர்வு ஆராயப்படும் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

### முத்தையன்கட்டில் இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

# எதிர்வரும் 15ஆம் திகதி முழுக் கதவடைப்பு

### தமிழரசுக் கட்சி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு முத்தையன்கட்டில் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் உயிரிழந்த இளம் குடும்பஸ்தருக்கு நீதி கோரியும் வடக்கு – கிழக்கில் நிலைகொண்டுள்ள இராணுவப் பிரசன்னத்தை எதிர்த்தும் எதிர்வரும் 15ஆம்திகதி வெள்ளிக்கிழமை முழுக் கதவடைப்புப் போராட்டத்தை வடக்கு – கிழக்கு தழுவிய ரீதியில் முன்னெடுக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## வாகன விபத்தில் பெண் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் முறிகண்டி பிரதான வீதியில் அமைதிபுரத்துக்கு அணமித்த பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

முறிகண்டிப் பகுதியில் இருந்து முழங்காவில் நோக்கிப் பயணித்த மோட்

15ஆம் பக்கம் பார்க்க

## மலேரியாவால் பாதிக்கப்பட்டவர் யாழில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மலேரியாக் காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்ட நபர் சிகிச்சை பலனின்றி நேற்று

16ஆம் பக்கம் பார்க்க

## குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடமும் சோமரத்ன உண்மையைக் கூறமாட்டார்

### நம்பிக்கையின்மையே காரணம் – மனைவி செனாலி

(கொழும்பு)

சர்வதேச விசாரணையில் சாட்சியம் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்ற சோமரத்ன ராஜபக்ஷவின் அறிவிப்பை அடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்தாலும் அவர் அவ்வதிகாரிகளிடம் எதனையும் கூறமாட்டார்.

ஏனெனில் கடந்தகாலங்களில் உண்மையைக் கூறிய போதிலும் நீதி கிட்டாததன் விளைவாக தாம் அக்கட்டமைப்புக்கள் மீது நம்பிக்கை இழந்திருப்பதாகவும் சோம

15ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றவுள்ள ஜனாதிபதி



(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எதிர்வரும் செப்ரெம்பரில் இரண்டு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளார்.

முதலில் நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்திற்காக அமெரிக்காவிற்கும் அதைத் தொடர்ந்து

15ஆம் பக்கம் பார்க்க

## செப்.8 இல் ஐ.நா மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர்

### முதல் நாளில் இலங்கை விவகாரம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8ஆம்திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அன்றைய தினமே இலங்கை தொடர்பான விரிவான எழுத்துமூல அறிக்கை

16ஆம் பக்கம் பார்க்க

## கொடிகாமத்தில் கோர விபத்து; ஒருவர் உயிரிழப்பு: மூவர் காயம்

(கொடிகாமம்)

கொடிகாமம் மிருசுவில் ஏ9 வீதியில் நேற்று இரவு 7 மணியளவில் நான்கு வாகனங்கள் விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சிப் பகுதியில் இருந்து யாழ்.நோக்கி வருகை தந்த காரும் - யாழில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த டிப்பர், கூலர் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியனவும் ஒன்றோடு ஒன்று மோதியதில்

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை விருட்சத்துக்கு அராலியில் நீர் சேகரிப்பு



நெடுங்காலமாக சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று ஞாயிற்றுக் கிழமை (10) அராலி முத்தமிழ் சன சமூக நிலையத்தில் விடுதலை நீர் சேகரிப்பு இடம் பெற்றது.

இந்த விடுதலை நீர் சேகரிப்பதற்கு முன்னர் இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. பின்னர் அராலிப் பகுதி மக்கள், சிறுவர்கள் ஆகியோர் தமது வீட்டில் இருந்து எடுத்து வரப்பட்ட விடுதலை நீரை பானையில் ஊற்றினர்.

குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய இந்த வேலைத் திட்டத்தில் அந்த அமைப்பின் செயற்பாட்டாளர் மு.கோமகன், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்கள், சிறகுகள் அமைப்பினர், முத்தமிழ் சன சமூக நிலையத்தினர், அராலி பகுதி மக்கள் மற்றும் சிறார்கள் கலந்து கொண்டனர்.

குறித்த செயல்திட்டமானது வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் அரசியல் கைதிகளின் விடுதலையை விரும்பும் புலம் பெயர் தேசங்களிலும் இந்த விடுதலை நீர் சேகரிக்கப்பட உள்ளது.

விடுதலை மரம் ஒன்றினை நாட்டி வைத்து அந்த மரத்துக்கு இவ்வாறு சேகரிக்கப்படும் நீர் ஊற்றப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## கொடிகாமத்தில் ...



இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் விபத்துக்குள்ளான வாகனங்கள் கடுமையாகச் சேதமடைந்திருப்பதுடன் நால்வர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கரகம்பகம் வரணியைச் சேர்ந்த 37 வயதான ஏரோன்ஸ்காந்த் என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,30)

## எதிர்வரும் ...

இது குறித்து இலங்கைத் தமிழரசக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது,

முத்தையன்கட்டு இராணுவ முகாமுக்குள் கடந்த 8ஆம் திகதி அழைத்துச் செல்லப்பட்ட நால்வரில் ஒருவர் இராணுவத்தால் கொடூரமாகத் தாக்கப்பட்டு முத்தையன் கட்டுக் குளத்தில் வீசப்பட்டதாக அறியக் கிடைத்துள்ளது.

இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த ஏனையவர்கள் தாங்கள் இராணுவத்தால் கடுமையாக தாக்கப் பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

ஆகவே இந்த விவகாரம் தொடர்பில் உடனடியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என நாங்கள் கோரியிருந்தோம்.

இப்போது சில இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டு அதில் மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளனர்.

ஆனால் இதில் மிக முக்கியமான விடயம் என்னவெனில், ஒரு சம்பவம் நடந்த பின்னர் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலோ, நீதியான விசாரணையைக் கோருவதிலோ பிரயோசனம் இல்லை.

வடக்குக் கிழக்கில் மிகமோசமாக இராணுவ முகாம்கள் செயற்படுகின்றன. தமக்குத் தேவையான வேலைகளையும் பெற்றுக் கொண்டு அதன் பின் வன்முறைகளையும் பிரயோகிக்கின்றார்கள். இதற்கு இச்சம்பவமும் ஒரு சான்று.

செம்மணியில் ஒரு சிறு பகுதியிலிருந்து 147 மனித என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. இவை இராணுவத்தின் கோர முகத்துக்குப் பலியானவர்கள் என்ற சான்றுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில், வடக்கு கிழக்கில் இராணுவம் நிலை கொண்டிருப்பதை கண்டித்தும் இராணுவப் பிரசன்னத்துக்கு எதிரான பாரிய எதிர்ப்பாக எதிர்வரும் 15ஆம் திகதி தமிழர் தாயகத்தில் முழுக்கதவடைப்புப் போராட்டத்தை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே இதற்கு வர்த்தகர்கள், கல்விச்சமூகத்தினர், அரசியல் கட்சிகள் என சகலரும் தமது ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றார். (ந-7)

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 - 05 - 1981



மறைவு 09 - 08 - 2025

### தவராசா மதன்மோகன் (மதன்)

இமையாணன் வடக்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா மதன்மோகன் அவர்கள் கடந்த (2025.08.09) சனிக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் செல்லையா தவராசா ( ஓய்வுநிலை பாடசாலைகள் கட்டடப்பரிசோதகர்) - கெங்காதேவி தம்பதியரின் பாசமிகு மகனும் தயாநிதி (லண்டன்) அவர்களின் அன்புக்கணவரும் சஸ்மியா (லண்டன்), அக்ஷயா (லண்டன்) ஆகியோரின் தந்தையும் பிரதாப் (ஆசிரியர் - யா/ஹாட்லிக்கல்லூரி), உஷாந்தினி (லண்டன்), சாலினி (கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரனும் மதனகௌரி (ஆசிரியை - யா/வல்வெட்டி இ.த.க பாடசாலை) மணிவண்ணன், சிவசங்கர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

077 353 5590 (C-3621)

பல ஆயிரம் கடந்த பதிவுகள்...


பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாணி மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்


தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரத்தில் போராட்டம்

**(சென்னை)..................................... எல்லைதாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 7 தமிழக மீனவர்கள் நேற்று முன்தினம் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் குறித்த கைது நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மீனவர்களை விடுவிக்கக்கோரியும் மீனவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**




இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்று முன்தினம் மீன் பிடிக்கச் சென்ற ஏழு மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்டதாக கூறி படகுடன் சிறை பிடித்துச் சென்ற இலங்கை கடற்படையை கண்டித்தும், கைது செய்யப்பட்ட மீனவர்களை படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்தியும் கைது செய்யப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் மதுரை தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் அமர்ந்து வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வீதிமறியல் போராட்டம் காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இராமேஸ்வரத்திற்கு வரக்கூடிய பிரதான வீதியில் மீனவர்களின் உறவினர்கள் அமர்ந்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையினால் சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரத்திற்கு இரு புறமும் வாகனங்கள் அணிவகுத்து நின்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் உறவினர்களிடம் பொலிஸார் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வரும் நிலையில் அவர்கள் போராட்டத்தை கைவிட மறுத்து தொடர்ந்தும் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# இலங்கையின் மசாலாப் பொருட்களுக்கு உலக சந்தையில் அதிக கேள்வி



(கொழும்பு)

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மசாலாப் பொருட்களுக்கு உலக சந்தையில் அதிக கேள்வி உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த வகையில், 2024 ஆம் ஆண்டு 888.74 மில்லியன் ரூபாய் பெறுமதியான பொருட்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இலங்கையிலிருந்து மிளகு, கறுவா என்பன இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன

இந்த பயிர்ச்செய்கைகள் மக்களிடமும் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன.

எனினும், உள்நாட்டில், உரிய விலைக்கு இவற்றை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (நி)

# அரசியல் பழிவாங்கலுடனான கைதுகள் அரசாங்கத்துக்கு எதிரானதாக அமையும்

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல்களை முன்னிலைப்படுத்தி இடம்பெறும் கைதுகள் அரசாங்கத்துக்கு எதிரானதாக அமையும். மக்கள் மத்தியில் செயற்பாட்டு ரீதியிலான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுங்களென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் நியமனம் குறித்து பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


இந்த சந்திப்பின் போது நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலவரங்கள் குறித்து பொதுச்செயலாளர் சாகர காரியவசம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எடுத்துரைத்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் இந்த ஆண்டு இலக்கிடப்பட்ட வளர்ச்சியை அடையாது என்று எதிர்வுகூறப்பட்டுள்ளமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிருப்தி தெரிவித்துள்ளதுடன், அரசாங்கம் அரசியல் பழிவாங்கல்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்குவது வெளிப்படையாகத் தெரிகிறது.

இதற்கு சுயாதீன ஆணைக்குழுக்களை பயன்படுத்திக் கொள்கிறது. அரசியல் பழிவாங்கல்களை முன்னிலைப்படுத்தி இடம்பெறும் கைதுகள் அரசாங்கத்துக்கே எதிரானதாக அமையும்.

கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் கட்சியுடன் இணைத்துக் கொள்வது தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் வெகு விரைவில் சாதகமான தீர்மானத்தை எடுக்கலாம் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (நி)

18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
04 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.
வயித்தி காங்கேசு
தோற்றம் - 18.02.1935
மறைவு - 23.04.2007



அமரர்.
காங்கேசு புவனேஸ்வரி
தோற்றம் - 01.10.1950
மறைவு - 26.07.2021

தண்ணீர் இல்லாத குளத்தில்
தத்தளிக்கும் மீன்கள் போல் எம்
தெய்வங்கள் இல்லாத உலகில்
தவிக்கின்றோம் நாம்

(1426)

62/1, கதிரமலை வீதி, சுன்னாகம்.
தகவல்- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## சொந்த மண்ணில் நொந்த ஜிம்பாப்வே தொடரை முழுமையாக வென்ற நியூசிலாந்து



ஜிம்பாப்வே மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 359 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஜிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய ஜிம்பாப்வே அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங் களைப் பெற்றுக்கொண்டது.

இதனையடுத்து முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 3 விக்கெட்டுகளை இழந்து 601 ஓட்டங்களைக் குவித்த நிலையில், ஆட்டத்தை இடை நிறுத்திக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் ரச்சின் ரவீந்திரா 165 ஓட்டங்களையும், டெவொன் கொன்வே 153 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இதற்கமைய 476 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில், இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய ஜிம்பாப்வே அணி 117 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

இதன்படி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2 - 0 என்ற அடிப்படையில் நியூசிலாந்து அணி கைப்பற்றியுள்ளது. (3)

## கிரிக்கெட் விளையாடிய அவுஸ்திரேலிய ஆளுநர்



அவுஸ்திரேலிய ஆளுநர் ஜெனரலும், அரசுத் தலைவருமான சாம் மோஸ்டின் ஏ.சி நேற்று முன்தினம் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கு விஜயம் செய்திருந்தார்.


இதன்போது இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ் உடன் அவுஸ்திரேலிய ஆளுநர் நட்புரீதியான கிரிக்கெட் போட்டியில் விளையாடியிருந்தார்.

மேலும், இந்த விஜயத்தின் போது, இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவிற்கும் இடையிலான வலுவான விளையாட்டு உறவுகளை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், வளரும் வீரர்களுக்கு கிரிக்கெட் உபகரணங்களையும் மோஸ்டின் வழங்கிவைத்ததிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)



49 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் கடினப்பந்தில் மூன்றாம் இடத்தினைப் பெற்று வட மாகாண அணியில் இடம்பிடித்த கிளிநொச்சி தருமபுரம் இளந்தாரகை விளையாட்டுக் கழகத்தின் மூன்று வீரர்களான இ.சுதாகர், நா.ஜதுஸன்.ப.துசாந்தன் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் தருமபுரம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. (படம்-தேவானந்தன்)

## ஜப்பானிய குத்துச்சண்டை வீரர் பலத்த காயத்தால் உயிரிழப்பு



ஜப்பானிய குத்துச்சண்டை வீரரான சிகெடோசி கோட்டாரி உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

28 வயதான இவர் காயங்கள் காரணமாக உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஓகஸ்ட் 2ஆம் திகதி யமடோ ஹடாவ் என்ற வீரருடன் இடம்பெற்ற குத்துச்சண்டைப் போட்டியின் போது அவர் பலத்த காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து அவர் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தநிலையில் சிகிச்சைகள் பலனளிக்காத நிலையில் அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

முன்னதாக கடந்த பெப்ரவரியில் நடந்த குத்துச்சண்டைப் போட்டியின்போது, ஐரிஸ் வீரரான ஜோன் கூனி உயிரிழந்த நிலையில்,இந்த ஆண்டில் பதிவான இரண்டாவது உயிரிழப்பாக இது பதிவாகியுள்ளது. (3)







தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் இந்தியத் துணைத்தூதரக அணியினருக்கிடையேயான சிநேகபூர்வத் துடுப்பாட்டத்தொடர் அண்மையில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது. (படங்கள்- சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்கு அழுத்தம் கொடுப்பதை தவிருங்கள்!

## புலமைப்பரிசில் பரீட்சை குறித்து பெற்றோர்களுக்கு அறிவுறுத்து

**(கொழும்பு) — நடந்து முடிந்த 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் வினாத்தாளுக்கு பதிலளித்த விதம் குறித்து பெற்றோர்கள் மாணவர்களிடம் கேள்வி கேட்பதைத் தவிர்க்க வேண்டும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி கோரியுள்ளார்.**




மாணவர்கள் தங்கள் குழந்தைப் பருவத்தைக் கழிக்க வாய்ப்பளிக்குமாறும், புலமைப்பரிசில் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு, குழந்தையின் குழந்தைப் பருவத்தை அழிக்க வேண்டாம் என்றும் பெற்றோர்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், புலமைப்பரிசில் பரீட்சை என்பது ஒரு பரீட்சை மட்டுமே, இதன் காரணமாக, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அழுத்தம் கொடுப்பதைத் தவிர்க்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

புலமைப் பரிசில் பரீட்சையை அடிப்படையாக கொண்டு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அழுத்தத்திற்கு உள்ளாக்கும் வகையில் செயற்பட வேண்டாம் என்று நான் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என்றார். (ரி)


# Invitation for Bids (IFB)

## Zonal Education Office - Vadamaradchy.

[1]. The Chairman, Regional Procurement Committee (RPC), on behalf of Zonal Education office-Vadamaradchy now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below

| S.N | Bid No | Name of the Work | Estimated Civil Cost LKR In Mn | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/41/20/04/03/2025/CM/Works/01 | Estimate for Repair work of Classroom Building at J/Nelliady Central College. | 3.923 | C9 or above | 60,000.00 | 25.11.2025 | 63 |

[2]. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.

[3]. Interested eligible bidders may obtain further information from Zonal Director's Education, Zonal Education office-Vadamaradchy [Email: acctvada@ yahoo.com.com] from 09.00 Hrs to 15.00 Hrs and inspect the bidding documents at the address Zonal Director's Education, Zonal Education office-Vadamaradchy Ist Mile Post, Pointpedro.

[4]. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule/ Bidding Data" of the Procurement Document.

[5]. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address Zonal Director's Education, Zonal Education office-Vadamaradchy Ist Mile Post, Pointpedro.from 11.08.2025 until 25.08.2025 from 09.00 Hrs to 15.00 Hrs. Upon payment of a **non-refundable fee of One thousand,Rupees [Rs 1,000.00 < 5 Mn of Estimated Civil cost]. The method of payment will be by cash.**

[6]. Bids must be delivered to the address Chairman, Regional Procurement Committee, Zonal Director's Education, Zonal Education office-Vadamaradchy Ist Mile Post, Pointpedro on or before 25th August 2025 and 15.30 Hrs. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.

[7]. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.

[8]. The pre-bid meeting will be held on 18.08.2025 at 10.30 Hrs at the Director's Education, Zonal Education office-Vadamaradchy 1st Mile Post,Pointpedro. The address (es) referred to above is (are): Chairman, Regional Procurement Committee. Zonal Education office-Vadamaradchy 1st Mile Post, Pointpedro.

(C-3620)

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Zonal Education Office-Vadamaradchy,**
**1st Mile Post, Pointpedro.**


# இராசிபலன்

11.08.2025
ஆடி 26, திங்கட்கிழமை
துதியை பிற்பகல் 12.15 மணி வரை

சதயம் பிற்பகல் 3.20 மணிவரை
சுப நேரம் 12.04 - 1.34 மணிவரை
இராகுகாலம் 7.34 - 9.04 மணிவரை

சந்திராஷ்டமம்
ஆயில்யம், மகம்.

வளவன்


மேஷம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நீங்கள் எதிர்பாராத ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


கடகம்

மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களைவிட்டு விலகலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.


துலாம்

வியாபார விருத்தியுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாய்வழி ஆதரவு பெருகும்.


மகரம்

சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

தூரதேசத்திலிருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும்.


சிம்மம்

கனவுப் பலிதமுண்டு, புதிய நபர்கள் அறிமுகம் கிடைக்கும், சொந்த பந்தங்களின் வருகையில் சிந்தை மகிழ்வீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.


விருச்சிகம்

மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.


கும்பம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


மிதுனம்

எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி காணும் நாள், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.


கன்னி

எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், மருத்துவச் செலவுகள் குறையும் கூட்டு முயற்சிகள் வெற்றி தரும்.


தனுசு

பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், குடும்பத்தினால் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மீனம்

உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள்.

**சாதிப்பவன் எப்போதும் செயற்பட்டுக் கொண்டிருப்பான்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வற்றாத வெள்ளமென வருமாம் கூட்டம்!



பூமிதனில் சூரியனும் புகுந்தாற் போல
பொன்னிறமாய் ஒளி வீசி ரதத்திலேறும்
சாமியவன் நல்லூரான் தன்னைக் காண
சகம் முழுதும் வந்தேதான் குவியும் அங்கே
தேம்பியழும் அடியவர்கள் கந்தன் தன்னின்
திருமுகத்தைக் கண்டேதான் திகைத்து நிற்பர்
காமனையே விழியதனால் எரித்த அந்த
கண்ணுதலான் மகன் வடிவை என்ன சொல்ல?

விண் அதிர முருகனவன் நாமம் சொல்லி
வீதியிலே உருளுகிற இளையோர் கூட்டம்
கண் எதிரே பக்தி நிலை வளரும் காட்சி
காட்டித்தான் பெரியோரை மகிழச் செய்யும்
மண்விழுந்து அடியளக்கும் பெண்களெல்லாம்
மாண்புடனே இல்லறத்தின் பெருமை சொல்வர்
எண்ணிறந்த நன்மைகளை வளர்க்கும் கந்தன்
ஏற்றமிகு திருவிழவை என்ன சொல்ல?

மஞ்சத்தில் முருகனவன் ஏறி நிற்பான்
மாண்புடனே தங்கரதம் தனிலே ஊர்வான்
விஞ்சையரும் வியந்திடவே விண்ணை முட்டும்
வீறான சப்பறத்தில் விளங்கத் தோன்றி
நெஞ்சமெலாம் அள்ளிடுவான் நீளப்பாயும்
நிமிர் குதிரை ஏழின் மேல் நிமிர்ந்து நிற்பான்
வஞ்சகனாம் இராவணனை அழுத்தும் கயிலை
வாகனத்தில் எழுந்தருளி வரங்கள் ஈவான்.

மாங்கனிக்காய் அண்ணனொடு போட்டியிட்டு
மனமொடிந்து போனதனால் துறவு பூண்டு
பாங்குடனே ஆண்டியெனக் காட்சி நல்கி
பக்தர்களை மதிமயக்கி பவனி செய்வான்
ஆங்கவனும் அறுமுகனாய்க் கோலங் கொண்டு
அடியவர்கள் சுமந்து வரத் தேரிலேற
வீங்கிடவே தோள்களெலாம் விம்மி நிற்பர்
விண்ணில்வாழ் தேவர்களும் வியப்பே அம்மா!

பந்தலிலே பலவிதமாம் பானம் தந்து
பக்தர்களை மகிழ்விப்பார் பலரும் அங்கு
விந்தைமிகு கறி சமைத்து அன்னமிட்டு
விளங்கிடவே விருந்திட்டு மகிழ்வார் அங்கு
புந்தியிலே அறிவேறும் வார்த்தை சொல்லி
புகழ்ந்திடவே பிரசங்கம் செய்வார் அங்கு
'சந்தியிலே நிற்பவர்கள்' தம்மைக்கூட
சடுதியிலே பக்தர்களாய் மாற்றும் நல்லூர்.

தேரூரும் வீதியிலே, தேர்க்குப் பின்னால்
திகழ்ந்திடவே காவடிகள் பலவும் ஊறும்
சீரூறும் அழகோடு திகழும் நல்ல
திரு அடியார் கூட்டமதும் சேர்ந்து ஊறும்
பாரோங்க முருகனவன் நாமம் சொல்லி
பலபேர்கள் வடம் பிடித்து இழுத்து நிற்க
ஊரோடு இணைந்தேதான் உள்ளமெல்லாம்
ஓம் முருகா! என்றேதான் உரைத்து நிற்கும்.

உலகமெலாம் அருள் பாய்ச்சி ஒளிர்ந்து நிற்கும்
ஒப்பற்ற நல்லூரான் வேலைக் காண
நிலம் முழுதும் இருந்தேதான் மக்கள் வந்து
நெஞ்சார அவன் அடியைத் தொழுது நிற்பார்
தளமதனில் நல்லூரான் அழகைப் போல
தாம் காண முடியாதென்றுறுதிபூண்டு
வளம் மிகுந்த நல்லூரான் வடிவைக் காண
வற்றாத வெள்ளமென வருமாம் கூட்டம்.

வேல் ஒளிரும், விண்ணார்ந்து நிமிர்ந்து நிற்கும்
வீறுடைய கோபுரமும் ஒளிர்ந்து நிற்கும்
சேல் இகழும் விழியுடைய தேவிமார்கள்
திருமார்பில் மங்களநாண் ஒளிர்ந்து நிற்கும்
ஏழுலகும் ஒலியெழுப்பி எழுந்து நின்று
ஏற்றமுறும் பெருமணிகள் ஒளிர்ந்து நிற்கும்
தாழ் பணியும் அடியவர்தம் நெஞ்சில் கந்தன்
தனியழகு எப்போதும் ஒளிர்ந்து நிற்கும்

சூரனவன் இன்றிருந்தால் நல்லூர்தன்னில்
'சொறிகின்ற' அடியார்தம் கூட்டம் கண்டு
நேரதிலா பெரும்படையாம் இதுவென்றஞ்சி
நெஞ்சார முருகன் தன் தாள்கள் தன்னை
வீறுடனே பற்றித்தான் விரல்கள் கோர்த்து
விம்மியழுதே தனது வினைகள் தீர்ப்பான்
தேரதனில் நல்லூரான் திகழும் போது
திருமுகத்தைப் பார்த்தேதான் அழுது நிற்பான்.

மங்கையர்கள் முகம் பார்த்து மகிழ்ந்து நிற்கும்
மன்னர்களால் ஒரு வீதி நிரம்பித் தோன்றும்
அங்கையிலே பூவோடு பழங்கள் ஏந்தும்
அடியவரால் ஒரு வீதி நிரம்பித் தோன்றும்
செங்கையதால் தாளங்கள் போட்டுப் பாடும்
செம்மையரால் ஒரு வீதி நிரம்பித் தோன்றும்
பங்கமிலா பனிப்பாகை சுவைத்து நிற்கும்
பாலர்களால் ஒரு வீதி நிரம்பித் தோன்றும்.
(பனிப்பாகு-ஐஸ்கிறீம்)

**கம்பவாரிதி இலங்கை.ஜெயராஜ்**




## கா! நல்லைக் குமரேசனே!

ஆடுவார் ஆட்டமும் பாடுவார் பாட்டுமாய்
அவனியே யதிர்ந்து சுழலத்
தேடுவார் தேட்டமும் திசைமாறுங் கூட்டமும்
தெளிவிலாத் தடுமாற்றமும்
சாடியே வாட்டிடும் சதுர்நாக ரீகமும்
கூடியே வாட்டும்போது
ஓடியே யெமைக்காக்க ஆடுமயி லோடுவரும்
ஒளிர்நல்லைக் குமரேசனே!

**கலாபூஷணம்,**
**சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.**

## மயிலேறி வாருமையா

நல்லையில் குடிகொண்ட தில்லையின்
மைந்தனே,
தொல்லைகள் நீக்கிட உன் மயிலேறி
வாருமையா,
தீயவை சுருக்கி நல்லவை பெருக்கி
எல்லையில்லா இன்பம்
எம்மவர் பெற்றிட எமக்கருள் தாருமையா,
அர்த்தநாரீஸ்வரர்க்கே அர்த்தம் சொன்னவரே
சொர்க்கம் செல்ல பக்தருக்கு வழிகாட்டுமையா
நல்லருள் நல்கும் வள்ளலே வள்ளிமணாளா,
மனமுருகி வேண்டுவோர்க்கு மனமிரங்கி
நல்லருளை தந்துவிடு நல்லை வாழ்
வேலவனே...

**திருமதி.தம்பிராஜா தேவாபரணம்**
**வதிரி கரவெட்டி.**

## 'தேரடியே நிம்மதி'

ஒரு ரூபாவில் உலகமே தெரிகிறது முருகா
பெருகிறதே உனது அற்புதம் - உருகுதே
தேரடியில் இருந்து கும்பிட்டால் போதுமே
சேருமே நிம்மதி எமக்கு.

**கே.எஸ்.சிவஞானராஜா**

## பக்தியுடன் தொழுகின்றார் பாலமுருகனை

"எப்பவோ முடிந்த காரியம் என - உரைத்த
சித்தர் யோகர் நடந்த - வீதியில்
முப்போதும் வந்து - சத்தியம்
நேர்மை நடுவு நிலை - தவறாது
பக்தியுடன் தொழுகின்றார் - பாலமுருகனை"

**திருமுறை செல்வர் ப.பாலசுப்பிரமணியம்**
**வேலணை பாலா**

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் குழு இசை நிகழ்வில் பாட்டு- திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவின் மாணவர்கள், வயலின்- இ.நிறோசன், மிருதங்கம்- ம.லோகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு- எம். எஸ். .பிரதீபன், வயலின்-கே.வேல தீபன், மிருதங்கம்-வ.றமண சர்மா, கெஞ்சிரா-செல்வன்.றமணசர்மா லய சர்மா, மோசிங்-செல்வன் றமண சர்மா கானா மிருதசர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

## நல்லூர் உற்சவகால அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவகாலத்தை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் அருளுரை இன்று திங்கட் கிழமை இரவு 8 மணிமுதல்8.30 மணி வரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு "விதியின் பயன் இதுவோ" எனும் தலைப்பில் அருளுரை ஆற்றுவார். (8)

## அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டு 53 வருடங்களுக்குப் பின்னர் முதல்முறையாக இலவச காணிப் பத்திரம் வழங்கும் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை மறுதினம் புதன் கிழமை கிளிநொச்சி மாவட்டபளை மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ. லால் காந்த, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், காணி மற்றும் நீர்ப்பாசனப் பிரதி அமைச்சர் டாக்டர் சுசில் ரணசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் கே.இளங்குமரன், வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்

# ஆயிரத்து 403 குடும்பங்களுக்கு சொந்தக் காணிகள் இல்லை

## பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் சுமார் ஆயிரத்து 403 இற்கும்மேற்பட்ட குடும்பங்கள் சொந்தக் காணிகளற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக பிரதேச செயலக தகவல்கள் மூலம் அறிய முடிந்துள்ளது

இது தொடர்பாக தெரிய வருகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் அதிக சனத் தொகை கொண்ட பிரதேசமாக காணப்படுகின்ற கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 403 வரையான குடும்பங்கள் சொந்தக் காணிகள் இன்றி கடந்த பல ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றன.

இதனால் குறித்த குடும்பங்கள் நிரந்தர வீட்டத்திட்டங்கள் நிலையான வாழ்வாதார வசதிகள் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு தகுதியற்ற குடும்பங்களாக காணப்படுகின்றன

இவ்வாறான குடும்பங்களுக்கான காணிகளை பெற்றுக் கொடுப்பதற்கு இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாக இல்லை என பலரும் குற்றம் சாட்டி வருகின்றனர்.

குறிப்பாக அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலும் குறித்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டதுடன் கிளிநொச்சி நகரத்தில் அதிகளவான குடும்பங்கள் நிரந்தரக் காணிகள் குடிநீர் வசதி, மின்சார வசதிகளின்றி வாழ்ந்து வருகின்றமை தொடர்பில் கிராம மட்ட பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதே வேளை கிளிநொச்சி இரத்தினபுரம் கனகாம்பிகை குளத்தில் இருந்து கிளிநொச்சி குளத்துக்குச் செல்லும் ஆற்றின் இருபக்கங்களும் உள்ள ஒதுக்க பிரதேசங்கள் மற்றும் ஆனந்தபுரம் பகுதிகளில் பெருமளவான ஆற்றொதுக்க காணிகள் கிளிநொச்சி குளத்தின் நீரேந்து பிரதேசங்கள் ஏற்கனவே இராமநாதபுரம், வட்டக்கச்சி ஆகிய பிரதேசங்களில் சொந்தக் காணிகளை வைத்துள்ளோர் ஆக்கிரமித்துள்ளனர்.

குறித்த காணிகள் அற்ற குடும்பங்களுக்கு காணிகளை பெற்றுக் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் இதுவரை முயற்சிகள் எடுக்கப்படவில்லை எனவும் பொது அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (8-315)

# கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் மனிதவள முகாமைத்துவ உயர்தரச் சான்றிதழ் 2025/2026 (Advanced Certificate in HRM) இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம் மற்றும் முதல் மொழி உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருப்பதோடு அவற்றுள் குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியினைக் கொண் டிருத்தல் அல்லது 30 கிரடிட் கொண்ட SLQF நிலை 1 மற்றும் அதற்கு மேற்பட்ட இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ஏதேனும் சான்றிதழ் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான புலத்தில் NVQF மட்டம் 3 இல் சித்தி அடைந்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய சமமான அல்லது உயர் தகைமைகள் கொண்டிருக்க வேண்டும். மற்றும் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை www.ou.ac.lkஎன்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து, எதிர்வரும் 20.08. 2025 வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021222 3374 என்னும் தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8)

# ஓவியப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தின் போது யாழ்ப்பாண பல்கலைக் கழக வஸ்பர் செயற்றிட்டம் நிகழ்த்தும் நீர்வளம் பேணல் பற்றிய பத்து நாள் சிறப்புக் கண்காட்சியுடன் சார்ந்தொழுகும் வகையில் சிறகுகள் அமையம் முன்னின்று நடத்தும் ஓவியப் போட்டிக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

போட்டி தலைப்புக் களாக தரம் 1 - 5 வரை யான மாணவர்களுக்கு "என் கிராம தண்ணீரின் கதை" "நீர் இல்லாது வாழ்க்கை இல்லை" போன் றனவும் தரம் 6 - 8 வரையான மாணவர்களுக்கு "நிலத்தடி நீர் - கண்ணுக்குத் தெரியாத செல்வம்" "நீர் பாது காப்பு - நம் பொறுப்பு", "நிலத்தடி நீர் - நம் எதிர்காலம்" போன்ற தலைப்புக்களும் தரம் 9 - 13 வரையான மாணவர்களுக்கு "நிலத்தடி நீர் - உயிரின் அடிக்கல்", "நீர் தட்டுப்பாட்டை தடுக்க - இன்று செயற்படு", "நிலத்தடி நீர் - சூழலின் அடிநாதம்" ஆகிய தலை ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

இப் போட்டியில் பங்கு பற்றும் மாணவர்களின் பெயர், தரம், பாடசாலை யின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் தெளிவாக குறிப்பிடப் பட்டு சித்திரங்கள் சிறகுகள் அமையம், இல 21/2 குமாரசுவாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பா ணம் எனும் முகவரிக்கு 20.08.2025 முதல் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பங்கு பெற்றும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் நல்லூரில் இடம்பெறும் நீர்வளக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களைப் பெற 077 218 1459 / 076 244 4504 குறித்த தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ள முடியும். (3)

## மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இணுவில்- மருதனார் மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை 7.35 மணி முதல் 7.18 மணி வரை உள்ள சுப முகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9.05 மணி முதல் 10.05 மணி வரையில் உள்ள சுப வேளையில் கிரியைகள் ஆரம்பமாகி 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணி முதல் 27 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் அடியவர்கள் எண் ணெய்க் காப்பு சாத்தமுடியும் அத்தோடு கும்பாபிஷேகத் தைத் தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள் ளதென ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் அறிவித்துள்ளார். (3)

## நெடுந்தீவுக்கான படகு சேவைகள்

# புதிய நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

நெடுந் தீவுக் கான போக்குவரத்து இடர்பாடுகளைக் குறைக்கும் முகமாக இன்று முதல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையேயான படகுகள் சேவை பரீட் சார்த்தமாக அதிகரிக்கப்படுகின்றது.

நெடுந்தீவுக்கான அதிகரித்த பயணிகள் மற்றும் சேவையில் ஈடுபட போதுமான படகுகள் இன்மை காரணமாக நெடுந்தீவுக்குப் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டது.

இதற்கமைய நேற்று முன்தினம் குறிகட்டுவான் இறங்குதுறையில் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், மாவட்ட செயலாளர், மேலதிக மாவட்ட செயலாளர், நெடுந்தீவு பிரதேச செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாண பணிப்பாளர் உள்ளிட்ட அதி காரிகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இம்முடிவு எட்டப்பட்டது.

இதற்கமைய காலை 6.15 மணிக்கு முதலாவது படகும் காலை 6.45 இற்கு இரண் டாவது படகும் நெடுந்தீ விலிருந்து குறிக்கட்டுவானிற்கு புறப்பட்டு மீளவும் முறையே 7.30 மணிக்கும் 8.30 மணிக்கும் குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவு நோக்கியும் பயணிக்கும்.

அதே போன்று பிற்பகல் 2.30 மணிக்கும், 3.30 மணிக்கும் நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவானிற்கு படகுகள் புறப்பட்டு மீளவும் மாலை 4 மணிக்கும், 4.45 மணிக்கும் நெடுந்தீவை சென்றடையக் கூடிய வாறு படகுசேவைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. (8-33)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 200 | 230 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 200 | 160 | 200 |
| தக்காளி | 150 | 200 | 150 | 130 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 300 | 300 | 250 | 200 | 400 |
| கரட் | 450 | 550 | 600 | 380 | 600 |
| பூசணி | 100 | 140 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 200 | 120 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 130 | 110 | 150 |
| பாகற்காய் | 400 | 450 | 300 | 350 | 500 |
| வெண்டக்காய் | 150 | 100 | 150 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 400 | 250 | 250 | 200 | 300 |
| பீற்றூட் | 150 | 150 | 150 | 130 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 480 | 500 |
| முருங்கைக்காய் | 250 | 400 | 400 | 230 | 350 |
| போஞ்சி | 700 | 800 | 600 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 200 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 40-100 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 100-250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-220 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 600 | 600 | 500 | 850 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 400 | 250 | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இது ஆக்கிரமிப்பு அல்ல; விடுதலை!

## காசாவை கைப்பற்றும் திட்டம் குறித்து இஸ்ரேல் பிரதமர் விளக்கம்




(ஜெருசலேம்)

ஹமாஸின் பிடியிலுள்ள காசாவை நாங்கள் விடுவிப்போம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு காசாவைக் கைப்பற்றும் தனது திட்டத்திற்கு விளக்கமளித்துள்ளார்.

காசாவை முழுமையாக ஆக்கிரமிக்கும் திட்டத்திற்கு நேற்று இஸ்ரேலிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

காசாவில் ஏற்கனவே 75 சதவீத பகுதிகளை தனது கட்டுப்பாட்டில் இஸ்ரேல் வைத்துள்ள நிலையில் மீதமுள்ள பகுதிகளையும் கைப்பற்ற பிரதமர் நெதன்யாகு உத்தரவிட்டார்.

இந்த முடிவை உள்நாடு மற்றும் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் விமர்சித்துள்ளனர்.

மேலும் இஸ்ரேல் மக்களே இது பணயக் கைதிகளை ஆபத்தில் தள்ளும் செயல் என நெதன்யாகு முடிவை எதிர்த்து வருகின்றனர்.

இந்த சூழலில், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது திட்டம் குறித்து விளக்கம் ஒன்றை அளித்துள்ளார்.

நெதன்யாகு தனது எக்ஸ் தள பதிவில் "நாங்கள் காசாவை ஆக்கிரமிக்கவில்லை. காசாவை ஹமாஸிடமிருந்து விடுவிப்போம். காசாவில் இராணுவ நடவடிக்கைகளைத் தடுப்போம். அமைதியான நிர்வாகத்தை நிறுவுவதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.பாலஸ்தீன அதிகார சபை, ஹமாஸ் அல்லது வேறு எந்தப் பயங்கரவாத அமைப்பும் அந்தப் பகுதியில் இருக்காது.

காசாவில் ஹமாஸால் சிறைபிடிக்கப்பட்ட நமது மக்களை விடுவிப்பதற்கு இந்த நடவடிக்கை பயனுள்ளதாக இருக்கும்.இது எதிர்காலத்தில் காசாவிலிருந்து இஸ்ரேலுக்கு ஏற்படும் எந்த அச்சுறுத்தலையும் நீக்கும்" என்று தெரிவித்துள்ளார். (நி)

## காசாவை...


## திட்ட...

## இஸ்ரேலிய...


(டெல்அவிவ்)

**காசாவை முழுமை... பிரதமர் பெஞ்சமின்... எதிராக இஸ்ரேலிய... கணக்கான இஸ்ரே... ஈடுபட்டனர்.**

இஸ்ரேலிய பிரதமர் இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும்,



## இஸ்ரேலிற்கான ஆயுத ஏற்றுமதியை நிறுத்தியது ஜேர்மனி



(பேர்லின்)

இஸ்ரேலிற்கான அனைத்து ஆயுத ஏற்றுமதியையும் ஜேர்மனி நிறுத்தியுள்ளது.


காசா நகரை முழுமையாக கைப்பற்றும் திட்டத்திற்கு இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை அனுமதி வழங்கியதை தொடர்ந்தே ஜேர்மனி இது குறித்து அறிவித்துள்ளது.

இந்த சூழ்நிலைகளின் கீழ் காசா பள்ளத்தாக்கில் எதிர்காலத்தில் பயன்படுத்தக்கூடிய எந்த இராணுவ ஏற்றுமதிக்கும் ஜேர்மனி அனுமதியளிக்காது என ஜேர்மன் சான்சிலர் பிரெட்ரிச் மேர்ஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிற்கு தன்னை பாதுகாப்பதற்கான உரிமையை ஆதரிப்பதாக தெரிவித்துள்ள அவர், ஹமாஸ் தனது பிடியில் உள்ள பணயக்கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுமக்களின் உயிரிழப்புகள் அதிகரிப்பதை இதற்கு மேலும் ஜேர்மனியால் சகித்துக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ள ஜேர்மனியின் சான்சிலர் காசா பள்ளத்தாக்கில் மேலும் கடுமையான நடவடிக்கைகளிற்காக இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை வழங்கியுள்ள அனுமதி காரணமாக இந்த இலக்குகள் எப்படி நிறைவேறப் போகின்றன என்பது தெரியவில்லை என குறிப்பிட்டுள்ளார். (நி)

## அமெரிக்க ஜனாதிபதிக்கு நோபல் பரிசு மேலும் சில நாடுகள் பரிந்துரை




(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டரம்ப்க்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என மேலும் சில உலக நாடுகள் பரிந்துரை செய்து வருகின்றன.

அதன்படி, புதிதாக அசர்பைஜான் மற்றும் ஆர்மீனியா ஆகிய நாடுகள் நோபல் பரிசுக்காக ட்ரம்பை பரிந்துரைத்துள்ளன.

முன்பதாக, பாகிஸ்தான், இஸ்ரேல், கம்போடியா ஆகிய நாடுகள் அமைதிக்கான நோபல் பரிசுக்காக ட்ரம்பை பரிந்துரைத்த நிலையில் தற்போது புதிய சில நாடுகளும் பரிந்துரைத்துள்ளது.


எனினும், பல்வேறு நாடுகளுக்கு இடையே நடந்த போரை நிறுத்திய தனக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க மாட்டார்கள் என ட்ரம்ப் தனது அதிருப்தியை வெளிப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## வெனிசுலா ஜனாதி... பிடித்துக் கொடுத்...

(வெனிசுலா)

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுலாவின் ஜனாதிபதி, நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது நெருங்கிய நண்பர்கள் மீது, கடந்த 2020 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியால், போதைப்பொருள் தீவிரவாதம் மற்றும் கொக்கைன் கடத்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அவரைக் கைது செய்ய உதவுவோருக்கு ரூ.131



கோடி பரிசுத்தொகை வழங்குவதாக முன்னதாக அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வை முழுமையாக ஆக்கிரமிக்கும்

# டத்திற்கு கடும் எதிர்ப்பு!

## லிய தலைநகரில் ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டம்

**முமையாக ஆக்கிரமிக்கும் இஸ்ரேலிய**
**சமின் நெதன்யாகுவின் திட்டத்திற்கு**
**லிய தலைநகர் டெல்அவிவில் ஆயிரக்**
**ஸ்ரேலியர்கள் ஆர்ப்பாட்டங்களில்**

பணயக்கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஆர்ப்



பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

காசாநகரை முழுமையாகக் கைப்பற்றும் நடவடிக்கை இராணுவ ரீதியிலான தீர்மானம் இல்லை, இது நாங்கள் மிகவும் நேசிக்கும் மக்களிற்கான மரண தண்டனை என ஹமாசிடம் பணயக்கைதியாக உள்ள ஓம்ரி மிரானின் மனைவி ஆர்ப்பாட்



டத்தில் தெரிவித்தார். அமெரிக்க ஜனாதிபதி இதில் உடனடியாக தலையிட வேண்டும் என மன்றாடினார்.


பேரணியில் கலந்து கொண்டவர்கள் பணயக் கைதிகளின் படங்களுடன் காணப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் இஸ்ரேலிய அரசாங்கம் குறித்து சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளதுடன், பெஞ்சமின் நெதன்யாகு மேலும் யுத்தத்தை தீவிரப் படுத்துவதை அமெரிக்க ஜனாதிபதி தடுத்து நிறுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இராணுவத்தினால் கொல்லப்பட்ட காசா சிறுவர்களின் படங்களுடனும் சில ஆர்ப்பாட்டக்காரர்கள் காணப்பட்டனர். (நி)

---

# திபதி நிக்கோலஸை

# த்தால் சன்மனம்



ந
ப்

அதன்பின், ஜோ பைடன் நிர்வாகம் அந்தத் தொகையை ரூ.219 கோடியாக அதிகரித்தது.

இந்தத் தொகை சர்வதேச பயங்கரவாதி ஓசாமா பின்லேடனை கைது செய்வதற்கு அமெரிக்கா அறிவித்த பரிசுத் தொகைக்கு நிகரானது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், வெனிசுலா ஜனாதிபதி மதுரோவை கைது செய்வதற்கான பரிசுத்தொகையை ரூ.450 கோடியாக( இந்திய ரூபாய்) உயர்த்துமாறு ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார் என அமெரிக்க அட்டர்னி ஜெனரல் தெரிவித்துள்ளார். (நி)

---

## பள்ளத்தில் பாய்ந்த பேருந்து

**❖25 பேர் ஸ்தலத்திலே உயிரிழப்பு**

**❖20 பேர் படுகாயம்**

(நைரோபி)


சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து நிலை தடுமாறி வீதியோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் 10 பெண்கள் உட்பட 25 பேர் உயிரிழந்துள்ளதுடன் படுகாயம் அடைந்த 20 பேர் மீட்கப்பட்டனர்.

ஆபிரிக்க நாடான கென்யாவின் நியாஹெரா நகரில் இருந்து நியாகாச்சிற்கு சென்ற பேருந்தில் சுமார் 50 பேர் பயணித்தனர். அவர்கள் அனைவரும் உறவினரின் இறுதிச் சடங்கை முடித்துவிட்டு வீடு திரும்பிய போது ககமேகா நெடுஞ்சாலையில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து நிலை தடுமாறி சாலை யோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் 10 பெண்கள் உட்பட 25 பேர் பலியாகினர்.

படுகாயம் அடைந்த 20 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசா குறித்து இஸ்ரேலின் முடிவுக்கு இலங்கை எதிர்ப்பு

(கொழும்பு)

காசா பகுதியை முழுமையாகக் கைப்பற்றுவதற்கான இஸ்ரேலின் முடிவை இலங்கை மிகவும் கவலையுடன் பார்ப்பதாகவும், இந்த நடவடிக்கை காசாவில் வன்முறை மற்றும் மக்களின் துன்பத்தை மேலும் அதிகரிக்கும் என்றும் இலங்கை தெரிவித்துள்ளது.

இந்த நிலைமைக்கு இலங்கை உடனடியாக போர் நிறுத்தத்தைக் கோருகிறது. அமைதியான, நீடித்த தீர் வைக் காண்பதற்காக அனைத்து தரப்பினரும் இராஜதந்திர பேச்சு வார்த்தைகள் மூலம் தங்கள் கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க வேண்டும் என இலங்கை வலியுறுத்தியுள்ளது. இதுவே காசா பிராந்தியத்தில் அமைதியை நிலை நாட்டுவதற்கான ஒரே வழி என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை வெளியுறவு அமைச்சு இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதில், காசாவில் அமைதி நிலவ இலங்கை எதிர்பார்ப்பதாகவும், போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் உடனடியாகச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது. (நி)



ஊரெழு மேற்கு முருகன் கோயிலடியைச் சேர்ந்த திருமதி.சரிதா ஐங்கரன் எனும் நலன் விரும்பியால் ஊரெழுப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கப்பட்டன.


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1987- இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி-பா: 42 1/2
உயரம்: 6'1"
தகைமை/தொழில்:BSc,Software Enginee (Canada)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/15534

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:புணர்பூசம்
கி-பா: 17 3/4
உயரம்:5'6"
தகைமை/தொழில்-BSc,MA
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ:B/15536

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்: சதயம்
கி-பா:21 3/4
7இல் செவ்
உயரம்:5'2"
தகைமை/தொழில்:O/L.கடை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ..: B/15537

பிறப்பு: 1984-இந்து
நட்சத்திரம்:சித்திரை
8இல் செவ்
கி-பா-48
உயரம்:5'9"
தகைமை/தொழில்: A/L.கடை(france)
எதிர்பார்ப்பு:வெளிநாடு( PRஉள்ளவர்)
தொ.இ:B/15538

பிறப்பு: 2000- இந்து
நட்சத்திரம்: சித்திரை
7இல் செவ்
உயரம்:5'9"
தகைமை/தொழில்:பண்ணைப் பொறுப்பாளர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ:B/15539

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1987-இந்து
நட்சத்திரம்: அனுசம்
1இல்செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: FineArts.DO
எதிர்பார்ப்பு: வெளிநாடு.விவாகரத்தானவர்
தொ.இ:G/15521

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்-சதயம்
கி-பா-37
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: HND IT,BIT,Network Designer
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15532

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்-கார்த்திகை
12 இல்செவ்
கி.பா -44 ½
உயரம்-5'6"
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ:G/15533

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா : 28 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில் -BSc,Teacher
எதிர்பார்ப்பு: பட்டதாரி.Banker
தொ.இ:G/15535

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா : 80
உயரம்: 5'2"
தகைமை/தொழில் -NVQ
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/15540

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 425



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# உயர்வோம்

ஒருத்தர் ஒரு தவறு செய்து விட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

உடனே "நீ செய்தது தவறு" என்று சொல்லுவது ஒருவகை. அதற்குப் பதிலாக, "எது சரி என்று அவர் புரிந்துகொள்ள உதவி செய்வது" இன்னொரு வகை.

இந்த இரண்டாவது வகை இருக்கு பாருங்கள். நிர்வாக இயலிலே இது ரொம்ப முக்கியம்.

அலுவலகத்திலே வேலை பார்க்கிற ஒருத்தர் முக்கியமா தெரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா?

ஊழியர்களிடம் எப்படிப் பழக வேண்டும்? மேலதிகாரிகளிடம் எப்படிப் பழக வேண்டும்? தனக்குக் கீழே வேலை செய்கிறவர்களிடம் எப்படிப் பழக வேண்டும்? வாடிக்கையாளர்களிடம் எப்படிப் பழக வேண்டும்? செம்மையான உறவை இவர்களாக எல்லோரிடமும் ஏற்படுத்திக் கொள்வது எப்படி? இதையெல்லாம் சொல்லிக் கொடுக்கிற பாடம் தான் (Inter Personal Skills) திறமையான உறவு என்பது.

எந்த வேலையிலே இருந்தாலும் சரி. இந்த உறவுகளை வளர்க்கும் திறன் உள்ளவர்கள் சீக்கிரம் முன்னுக்கு வந்துவிடுவார்கள்.

மற்றவர்களிடம் உறவை பலப்படுத்துவது எப்படி என்று தெரிந்து கொண்டோமென்றால் எந்தவொரு தடையையும் சுலபமாகத் தாண்டி, செய்கின்ற தொழிலில் முன்னுக்கு வந்து விடலாம்.

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திலே ஒரு கணக்கெடுப்பு செய்தார்களாம். "பார்க்கின்ற வேலையிலே எதுமாதிரி குணாதிசயம் உள்ளவர்கள் வேகமாக முன்னுக்கு வருகின்றார்கள் என்று தெரிந்து கொள்வதற்காக இந்தக் கணக்கெடுப்பு.

வெவ்வேறு துறையிலே வேகமாக முன்னுக்கு வந்திருக்கின்ற பலபேரை சந்தித்து இந்த "சர்வே" யை நடத்தியிருக்கின்றார்கள். அவர்கள் கண்டுபிடித்து சொல்லியிருக்கிற உண்மை என்ன தெரியுமா?

ஒருத்தர் ஒரு வேலையிலே இருந்தால் அது சம்பந்தப்பட்ட சப்ஜெக்ட் பற்றி அறிவு 35 சதவீதம் இருந்தால் போதும்.

ஆனால் "உறவுகளை வளர்க்கும் திறன்" 65 சதவீதம் வேண்டும். இப்படி உள்ளவர்கள் சீக்கிரம் முன்னுக்கு வந்துவிடுவார்கள்.

அதனாலே ஒருத்தருக்கு வேலை சரியாக புரியவில்லை என்றால் கூட விவரமாக மற்றவர்களிடம் பழகுவது எப்படி என்பதை புரிந்தால் போதும். அவர் முன்னுக்கு வந்துடலாம். அலுவலகங்களிலே மட்டும் இல்லை. எல்லா இடங்களிலேயும் இது ரொம்ப முக்கியம். வீட்டுக்குள்ளேயும் இது முக்கியம். வீட்டுக்கு வெளியேயும் இது முக்கியம்.

அடுத்தவர்களிடம் பழகுவது எப்படி என்பதை தெரிந்து கொள்ளாதவன் வாழ்க்கையிலே முன்னேறமுடியாது.

இன்றைக்கு ஆயுதங்களாலே காயப்படுத்திக் கொள்கிறவர்களை விட, வார்த்தைகளாலே காயப்படுத்திக் கொள்கிறவர்கள் தான் அதிகம்.

பெரியவர்கள் (தலாய்லாமா) என்ன சொல்கிறார்கள்தெரியுமா?

"நீங்கள் இந்தப் பூமியில் பிறந்ததன் அர்த்தம் பூர்த்தியாக வேண்டும் என்றால், அடுத்தவருக்கு உதவி செய்யுங்கள். அடுத்தவருக்கு உதவி செய்ய முடியாவிட்டால் கூடப் பரவாயில்லை. ஆனால் யாரையும் புண்படுத்தி விடாதீர்கள்!" என்று சொல்கின்றார்கள்

எனக்குத் தெரிந்த ஒருத்தர் ஓர் அலுவலகத்திலே வேலை பார்க்கறார். அவர் சொல்லுவார்.

எனக்கு இந்த Inter Personal Skill ரொம்ப அதிகம் சார். ஊழியர்களிடம் ரொம்ப சுமுகமாக நடந்து கொள்வேன்.

என்கூட வேலை பார்க்கிற ஒருத்தருக்கு ஏதாவது கஷ்டம் என்றால் அந்த சமயத்திலே அவர் செய்ற வேலையை நான் செய்துவிடுவேன் சார்! நான் அவரிடம் சமீபத்திலே அப்படி ஏதாவது செய்திருக்கின்றீர்களா? என்று கேட்டேன்.

"செய்திருக்கின்றேன் சார்! போன வாரம் புதன்கிழமை ஆபீஸ்லே என் பக்கத்து சீட் காரருக்கு வயித்துவலி. உடனே நான் "மெடிக்கல் லீவு போட்டுவிட்டு என் வீட்டுக்குப் போய் விட்டேன் சார்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்

## முன்னாள் நீதியமைச்சர் விஜயதாச வலியுறுத்து

**(கொழும்பு)**
**பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று முன்னாள் நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.**

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கம் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் வெளிப்படைத்தன்மையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இரத்துச்செய்ய வேண்



டும் என்று தமிழ் அரசியல் தலைமைகள் தொடர்ச்சியாக வலியுறுத்துவது முறையற்றது.

உலகளாவிய ரீதியில் பயங்கரவாதம் தற்போது பல்வேறு வழிகளில் செயற்படுகிறது. இவ்வாறான நிலையில் இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்வது பிரச்சினைக்குரியதாக அமையும். தேசிய பாதுகாப்பினை முன்னிலைப்படுத்தியே அனைத்து தீர்மானங்களையும் எடுக்க வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வது தொடர்பில் எமது அரசாங்கத்தில் வெளிப்படையான பல நடவடிக்கைகளை மேற்கொண்டோம். சிவில் தரப்பினர் உட்பட கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம்.

சட்டவரைபு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கும் தருவாயில் இருந்த நிலையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதாக தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்யும் காலவரையை ஜனாதிபதியால் குறிப்பிட முடியுமா, இந்த அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும் என்ற நம்பிக்கை கிடையாது. அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் ஒன்றிணையும் போது பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசாங்கம் ஆயுதமாக பயன்படுத்தும்.

ஜனாதிபதி சட்டத்தரணி தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இருப்பினும் இதுவரையில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் வெளிப்படைத் தன்மையில் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வது சந்தேகத்துக்குரியது எனத் தெரிவித்தார். (நி)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மாம்பழம்

Botanical Name
- Mangifera indica
Family- Anacardiaceae

மாம்பழம் அதன் இன்ப மயமான சுவைக்காக "உணவுகளின் கடவுள்" எனவும் அழைக்கப்படுகின்றது. ஆனால் மாம்பழம் அதன் சாற்றின் அருமையான சுவையையும் தவிர, மேலும் அதிகமான போசனை, மருத்துவப் பலன்களை அளிக்கக் கூடியது.

சித்தமருத்துவத்தை பொறுத்தமட்டில் இங்கு மரபணு மாற்றப்படாத மாம்பழங்களே குறிப்பிடப்படுகின்றது. மாம்பழம் விற்றமின்கள், பாலி-போனோலிக் புளோ லோனாய்டு, உயிர் வளியேற்ற எதிர்ப்பிகள் ப்ரோபையோடிக் உணவு சார் நார்ச்சத்துக்கள் மற்றும் தாதுக்கள் ஆகியவற்றை செறிவாகக் கொண்டிருக்கிறது.

அது நமது உடலின் ஒட்டு மொத்த ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு மிகவும் நன்மை புரிகின்ற உயிர்ச்சத்து A,C மற்றும் உயிர்சத்து D போன்ற விற்றமின்களையும் கொண்டிருக்கிறது.


அவற்றின் ஆரோக்கியத்தை அதிகரிக்கும் நன்மைகளைப் பெற அவற்றை பழமாக அல்லது சாறுகளாக பயன்படுத்த இயலும். அநேகமாக இந்த இரட்டை நன்மைகளே மாம்பழம் "பழங்களின் அரசன்" எனக் கூறப்படுவதற்கும் காரணமாக இருக்கலாம்.

மாம்பழங்கள் பெரும்பாலும் வெப்பமண்டல பிரதேசங்களில் வளர்க்கப்படுகிறது. மாம்பழங்களில் நூறுக்கும் மேற்பட்ட இனங்கள் இந்தியா, இலங்கையில் உண்டு. மாம்பழம் இரத்தச் சோகைக்கு சிறந்தது. கொழுப்பு அளவுகளைக் குறைக்கிறது.

புற்றுநோய் எதிர்ப்புப் பண்புகள் உண்டு. கல்லீரலை சிறப்பாக செயற்பட வைக்கும் சத்துக்கள் உண்டு. என்புகளை வலிமைப் படுத்தும் குணங்கள் உண்டு. கண் பார்வைக்கு சிறந்தது. தோலை பளபளப்பாகவும் மிருதுவாகப் பேணவும் உதவுகிறது. இருதயத்தை பாதுகாக்கக்கூடியது. மலச்சிக்கலை நீக்கக்கூடியது. உடல் எடையை சரியாக பராமரிக்க உதவும், இரத்த அழுத்தத்தை சீராக பேண உதவும், மொத்தத்தில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடியது.

ஒரு கோப்பை அளவு மாம்பழம் கிட்டத்தட்ட 100 கலோரிகளை கொடுக்கும். மாம்பழமானது வெப்ப அதிர்ச்சி ஏற்படாமல் தடுக்கிறது.

வெப்பம் மிகுந்த கோடை காலத்தில் உங்கள் உடலின் நீர்ச்சத்தை போதிய அளவில் பராமரிப்பதற்கு



நீங்கள் மாம்பழம் சாப்பிடலாம்.

மாம்பழத்தில் நார்ச்சத்து காணப்படுவதால் மலத்தை இலகுவாக்க மற்றும் அவை உணவு கால்வாயில் எளிதாக பயணிக்க உதவுவதன்மூலமாக மலச்சிக்கலை போக்குகிறது. மாம்பழங்கள் இயற்கையான கொழுப்பு குறைப்பிகள் ஆகும்.

மேலும் அவை அடுத்த படியாக இரத்த அழுத்த அளவுகளை பராமரிக்க உதவுகின்ற பொட்டாசியத்தின் மிகச் சிறந்த ஒரு ஆதாரமாகும்.

இந்த இரண்டு பண்புகளும் இணைந்து மாரடைப்பு மற்றும் பக்கவாதம் போன்ற இதய நாளப் பிரச்சினைகள் ஏற்படுகின்ற அபாயத்தை குறைக்கின்றது.

மற்றும் சருமத்தில் கலங்களின் ஒருங்கிணைப்பை பராமரிப்பதில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கின்ற உயிர்ச்சத்து A, C அதிகளவில் காணப்படுகின்றது.

மாம்பழத்தில் காணப்படும் நீரில் கரைகின்ற நார்ச்சத்துக்களானவை கொழுப்பு அளவுகளை குறைக்க வழிவகுக்கும்.

மாம்பழத்தின் சதைப் பகுதியில் உள்ள கரோட்டினொய்ட்டுக்கள் புற்றுநோய் வளர்ச்சி மற்றும் பரவுவதை தடுப்பதில் மிகவும் பயனுள்ளதாகும். தாவரம் சார் மருந்தியல் இதழில் குறிப்பிடப்பட்ட ஒரு ஆய்வின் படி, மாம்பழத்தின் தோல் சில திறன் புற்றுநோய் எதிர்ப்பு பண்புகளை கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

மாம்பழத்தில் காணப்படும் இரும்புச்சத்தானது இரத்தச் சோகை ஏற்படாமல் தடுக்க உதவுகிறது.

இதில் உள்ள இரும்புச்சத்தை உடலுக்குள் கிரகிக்க மாம்பழத்திலுள்ள உயிர்ச்சத்து C உதவுகிறது.

மாம்பழத்தில் காணப்படும் மேன்றி ஃபெரின் எனும் வேதியற் பொருள் கல்லீரல் கலங்களின் சேதத்தை குறைக்கக் கூடியது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலும் சில ஆய்வுகள் மாம்பழம் சாப்பிட்டுவர இரத்தத்திலுள்ள அல்ககோலின் அளவை குறைப்பதன்மூலம், மது அருந்துவதால் ஏற்படும் அறிகுறிகளை குறைக்க உதவும் எனத் தெரிவிக்கிறது.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

நீரிழிவு நோயாளிகள் மாம்பழம் 75 கிராம் அளவுடன் பாதாம் பருப்பை சேர்த்து சாப்பிடும் போது திடீரென சர்க்கரை உயர்த்தும் திறன் ஏற்படமாட்டாது. மாம்பழங்களை வைக்கோலில் பழுக்க வைக்க வேண்டும். மரபணு மாற்றப்படாத ஊர்ப்பழங்களாக இருக்க வேண்டும்.

வைக்கோலில் பழுக்க வைக்கும் போது சில பழங்கள் பச்சையாகவும். பச்சை மஞ்சள் கலந்ததாகவும், சில பழங்கள் மஞ்சளாகவும் இருக்கும். இப்படியான பழங்களை நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

இவையே இயற்கை முறையில் பழுத்த பழங்கள் ஆகும்.

இவைதான் உடலிற்கு ஆரோக்கியமானவையாகவும் இருக்கும். இவற்றின் சத்துக்கள் போசணைக் கூறுகளுக்காக அவரவர்களின் வயது, உடல் நிலையைப் பொறுத்து மாம்பழங்களை தாராளமாக சாப்பிடலாம். கிட்டத்தட்ட 100 கிராம் மாம்பழத்தில் 60 கலோரிகளும் 15 கிராம் காபோவைதரேற்றும், 1.5 கிராம் நார்ச்சத்தும் கிடைக்கும். ஆகவே மிதமான நீரழிவு நோயாளிகள் மாம்பழம் சாப்பிடலாம்.

விலை அதிகமான பழங்களை விட குறைவாகவே சர்க்கரை அளவை உயர்த்தும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 841





"நிச்சயமாக வருவேன் பூங்குழலி! நீ விரும்பினால் வருவேன். ஆனால் ஏன் நீ உன் மனத்தை இப்படி எல்லாம் குழம்ப விடுகிறாய். எங்கெல்லாமோ வெகுதூரத்துக்குப் போய்விட்டாயே? முதலில் உன் அத்தையைக் கண்டுபிடித்துக் காப்பாற்ற வேண்டியதல்லவா முக்கியமான காரியம்? அவளைப் பிடித்துக் கொண்டு போன துஷ்டர்களிடமிருந்து அவளை விடுதலை செய்ய வேண்டாமா? உன் தந்தை, அண்ணன் முதலியவர்களிடம் சொல்ல வேண்டாமா?"

"அமுதா! என் அத்தை தெய்வீக சக்தி உள்ளவள். அவளுக்கு யாரும் எந்தவிதமான கெடுதலும் செய்ய முடியாது. தமயந்தி வேடனை எரித்தது போல கண் பார்வையினாலேயே எரித்து விடுவாள். ஆகையால் அவளைப் பற்றிக்கூட எனக்கு அவ்வளவு கவலையில்லை. ஆனால் இந்தச் சோழ சாம்ராஜ்யத்தில் பட்டப்பகலில் இவ்வளவு பெரிய அக்கிரமம் நடக்கிறதே? பராந்தகச்சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து இந்த நாட்டில் தர்ம ராஜ்யம் நடப்பதாகச் சொல்லுகிறார்கள்.

மகாசிவ பக்தராகிய கண்டராதித்த மன்னர் அரசு புரிந்த நாட்டில், பசுவும் புலியும் ஒரு துறையில் தண்ணீர் குடித்தது என்று பெருமை பேசிக்கொள்கிறார்கள். சுந்தர சோழரின் அரசாட்சியின் கீழ் சோழ நாட்டில் எந்த ஒரு சிறு பெண்ணும் இரவு பகல் எந்த நேரத்திலும் பயமின்றிப் பிரயாணம் செய்யலாம் என்று பறைபறைந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் புகழ்பெற்ற இராஜ்யத்தில், ஒரு மூதாட்டியை காது கேளாத பேசத்தெரியாத ஒரு பேதை ஸ்திரீயை, பட்டப் பகலில் துஷ்டர்கள் பிடித்துக் கொண்டு போவதென்றால், அது எப்படிப்பட்ட அக்கிரமம்? என் அத்தையைப் பற்றிக் கூட எனக்கு அவ்வளவு கவலை இல்லை. இன்றைக்கு என் அத்தைக்கு நேர்ந்தது நாளைக்கு எனக்கு நேரலாம் அல்லவா? இன்னும் இந்த நாட்டிலுள்ள கன்னிப் பெண்கள் பலருக்கும் நேரலாம் அல்லவா?"

சேந்தன் அமுதன் இப்போது குறுகிட்டு, "ஆமாம் அத்தகைய அபாயம் இந்த நாட்டில் இப்போது இருக்கத்தான் இருக்கிறது. சுந்தர சோழர் நோயாளியாகிப் படுத்ததிலிருந்து சோழ நாட்டில் தர்மம் தலைகீழாகி விட்டது. கட்டுக்காவல் அற்றுப் போய்விட்டது. கன்னிப் பெண்களுக்கு அபாயம் எங்கே என்று காத்திருக்கிறது. ஆகையால் கன்னிப் பெண்களெல்லாம் கூடிய சீக்கிரம் கலியாணம் செய்து கொண்டு விடுவதுதான் நல்லது!" என்றான். பூங்குழலி கலகலவென்று சிரித்தாள்.

"அமுதா! ஒரு கன்னிப் பெண் உன்னைக் கலியாணம் செய்து கொண்டால் அவளை உன்னால் காப்பாற்ற முடியுமா? உனக்கு கத்தி எடுத்துப் போர் செய்ய தெரியுமா?" என்று கேட்டாள்.


"மலர் எடுத்து மாலை தொடுக்கவும் பதிகம் பாடிப் பரமனைத் துதிக்கவுந்தான் நான் கற்றிருக்கிறேன். கத்தி எடுத்து யுத்தம் செய்ய நான் கற்கவில்லை. அதனால் என்ன? துடுப்புப் பிடித்துப் படகு தள்ள நீ எனக்குக் கற்றுக் கொடுத்து விடவில்லையா? அதுபோல் வாள் எடுத்துப் போர் செய்யவும் கற்றுக் கொண்டு விடுகிறேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## காட்டில் தேர்தலோ தேர்தல்



காட்டில் வசிக்கும் மிருகங்களுக்கு, அவர்கள் தலைவனாக ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு தேர்தல் நடைபெற உள்ளது. ஜனாதிபதியான சிங்கம் முன்னிலையில் இந்த தேர்தல் நடைபெறும் என தேர்தல் குழு தலைவர் கரடியார் அறிவித்து விட்டார். யார் யார் போட்டியில் கலந்து கொள் கிறார்களோ அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்யலாம் என கரடியார் தலைமையிலான தேர்தல் அலுவலகம் அறிவித்து விட்டது.

புலியாரை நிற்க சொல்லி பூனைகள் இனத்தலைவர் வற்புறுத்தினார். புலியார் மறுத்து விட்டார். என்னால் யாரிடமும் பேசிக் கொண்டிருக்க முடியாது, ஒரே அடியில் பிரச்சினையை முடித்து விடுவேன். அதனால் மற்ற மிருகங்கள் என்னிடம் பேச்சுவார்த்தைக்கு வர பயப்படும், ஆகவே நான் இந்தப் போட்டிக்கு வரவில்லை, என சொல்லி விட்டது. உடனே பூனைகள் இனத்தலைவர் தம் இனம் சார்பாக சிறுத்தையை நிற்க வைக்கலாம் என முடிவு செய்து விட்டன.அதே போல் நாய்கள் இனத்தின் தலைவர் தம் இனத்தின் சார்பாக "ஓநாயை" நிறுத்தலாம் என முடிவு செய்தன. ஓநாயும் சம்மதம் தெரிவித்து விட்டது. குதிரைகள் இனம் சார்பாக வரிக்குதிரையை நிற்க வைக்க அதன் தலைவர் கேட்டார். வரிக்குதிரையார் முதலில் மறுத்தவர் பின் தயங்கித் தயங்கி ஒப்புக்கொண்டார். இருந்தாலும் வலிமையான சிறுத்தை இனத்தையும், ஓநாய் இனத்தையும் சமாளிக்க கூட்டணி அவசியம் என்று சொல்லிவிட்டார்.

உடனே குதிரை இனத் தலைவர் யானை இனங்களின் தலைவரிடம் பேச்சுவார்த்தை நடத்த ஐம்பது ஐம்பது என்ற விகிதத்தில் பிரித்துக்கொண்டால் கூட்டணிக்கு சம்மதம் என சொல்ல குதிரை இனங்களின் தலைவர் அதற்கு ஒப்புக்கொண் டார். இப்பொழுது குதிரையும் யானையும் இணைந்த கூட்டணி உருவாகி விட்டது. தேர்தல் செய்திகளை தொகுத்து வழங்க, "தினப்புறா" பத்திரிகையும், சிட்டுக் குருவி பத்திரிக்கையும் தயாராகி விட்டன.

அதற்காக புறாக்களை காடு பூராவும் அனுப்பி செய்தி சேகரிக்க "தினப்புறா" பத்திரிகையும், சிட்டுக் குருவி பத்திரிக்கையும் அது போல சிட்டுக்குருவிகளை அனுப்பின. அந்த அந்த கட்சிகள் சார்பாக தேர்தல் அறிக்கையை அறிவித்தன.

சிறுத்தையார் நிற்கும் கட்சி சார்பாக

1. பூனைகளை, மனிதர்கள் துன்புறுத்தினால் நடவடிக்கை எடுப்போம்.

2. காட்டில் உள்ள அசைவ மிருகங்களின் குடும்பங்களுக்கு இலவசமாக மாமிசங்களும், சைவ மிருகங்களுக்கு ஒரு கட்டு புல்லும் வழங்கப்படும் என அறிவித்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ நடந்து போக பாதையில்லை என்று கவலைப் படாதே நீ நடந்தாலே அது பாதை.

– அடொல்ஃப் ஹிட்லர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# கிளிநொச்சி மாவட்ட சிவில் நடவடிக்கையில் இராணுவத் தலையீட்டை உடன் நிறுத்துக!

## சிறீதரன் எம்.பி ஜனாதிபதிக்குக் கடிதம்

(கிளிநொச்சி)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவப் பிரசன்னம் அதிகமாகக் காணப்படுவதோடு போரால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் சிவில் நடைமுறைகளில் இராணுவத் தலையீடு தீவிரமடைந்துள்ளதால் அச்செயற்பாட்டை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் தலைவருமான சிவஞானம் சிறீதரன் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

வடமாகாண ஆளுநர், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச செயலாளர் மற்றும் தவிசாளர்கள் ஆகியோருக்கும் குறித்த கடிதம் பிரதியிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போருக்கு முற்பட்ட காலத்தில் கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கிளிநொச்சி பொது நூலகம் ரூபவ் பொதுவிளையாட்டு மைதானம் என்பனவற்றுக்குரிய 13.5 ஏக்கர் காணி போருக்குப் பின்னர் இராணுவத்தினரால் முழுமையாகக் கையகப்படுத்தப்பட்டிருந்தது.

இதில் 9பரப்புக்காணி பொதுநூலகத்துக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில் கடந்த 10வருட கால போராட்டத்தின் விளைவாக 5 பரப்புக் காணி மட்டும் விடுவிக்கப்பட்டு நூலக நிர்மாணத்தின் முதற்கட்டப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

எனினும் கிளிநொச்சி மாவட்டத்தின் நகர வடிவமைப்பில் முக்கிய பங்கு வகிக்கும் பொது நூலகக் காணியின் ஒரு பகுதி இன்றளவும் இராணுவத்தால் விடுவிக்கப்படாதுள்ளமை மாவட்டத்தின் திட்டமிடலிலும் கல்வித்தளத்திலும் பாதகமான தாக்கங்களை உருவாக்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகத்தின் ஒருபகுதி இராணுவ முகாமாக உள்ள சமநேரத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்குத் தேவையான காணியில் இராணுவ நினைவுத்தூபி அமைக்கப்பட்டு இராணுவத்தளமாக எல்லைப்படுத்தப்பட்டுள்ளதுடன் குறித்த காணியின் ஒருபகுதியை இலவச இணையத்தளவலையமைப்பாகப் பிரகடனப்படுத்தியுள்ள இராணுவத்தினர், அதனைப் பயன்படுத்தி இளைஞர், யுவதிகளை குறித்த பகுதிக்குள் உள்ளீர்ப்பதன் மூலமாக சமூகவிரோதச் செயற்பாடுகளுக்கான பகிரங்க வெளியை ஏற்படுத்தியுள்ளனர்.

2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் நடைபெற்றபோது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கல்வித் திணைக்களங்களின் மேற்பார்வையில் நடாத்தப்பட்டு வந்த முன்பள்ளிகள் இராணுவத்தினரின் சிவில் பாதுகாப்புப் படைப்பிரிவினரால் வலுக்கட்டாயமாகக் கையகப்படுத்தப்பட்டு அங்கு கற்பிக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்களும் சிவில் பாதுகாப்புப் பிரிவின் நிர்வாக ஆளுகைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 303பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 166பேரும் யாழ்ப்பாணத்தில் 12பேருமாக 481பேர் இராணுவப் படையணிச் சம்பளத்தைப் பெற்று கடமையாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரிலும் சில கிராமங்களிலும் பொதுப்பயன்பாட்டிடங்களை அண்மித்த பகுதிகளில் உணவகங்களையும் சிகை அலங்கரிப்பு நிலையங்களையும் இராணுவத்தினர் நடாத்தி வருகின்றமையானது உள்ளூர் வர்த்தகர்களுக்கு வருமான இழப்பையும் சமூக முரண் நிலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சியின் முதன்மை அடையாளங்களுள் ஒன்றாக விளங்கும் சுற்றுலாத்தளமான கௌதாரிமுனை கடற்கரைப் பகுதியை கட்டண அறவீட்டுடன் நிர்வகிக்கும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றமையானது பொருத்தமற்றதாகும்.

ஆகவே கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் செயற்பாடுகளில் இராணுவத்தின் தலையீட்டை உடனடியாக நீக்குவதோடு முன்பள்ளிகளை உடனடியாக மாகாண கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது. (ந-7)

# முத்தையன்கட்டுச் சம்பவம் உரிய விசாரணை தேவை

முத்தையன்கட்டுப் பகுதியில் இராணுவத்தின் தாக்குதல் காரணமாக எதிர்மன்ன சிங்கம் கபில்ராஜ் என்ற இளம் குடும்பஸ்தர் உயிரிழந்த சம்பவம் மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சியில் இராணுவ மிலேச்சத்தனத்துக்கு இடமிருக்காது என்ற நம்பிக்கையோடு இருந்த தமிழ் மக்கள் முத்தையன்கட்டுச் சம்பவத்தால் அதிர்ந்து போயுள்ளனர்.

தவிர, இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் இன ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமென நினைத்தாலும் அதற்கு இராணுவம் இடம் தராது என்பதுபோல மேற்படி சம்பவம் அமைந்துள்ளது. யுத்தம் முடிந்து சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ளபோதிலும் தமிழ் மக்களைத் தாக்குவதில் இராணுவத்தின் மனநிலை இன்னமும் மாறவில்லை என்பது இதன்மூலம் நிரூபணமாகியுள்ளது.

ஆம், இலங்கையில் படையினர் என்றால் அது தமிழ் மக்களுக்கு எதிரான கட்டமைப்பு என்ற எண்ணம் முப்படைகளிடமும் வலுப்பெற்றுள்ளது. இதற்குக் காரணம் நாட்டைப் பாதுகாப்பதற்காக – நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காக இலங்கை இராணுவம் கட்டமைக்கப்படவில்லை.

மாறாக, தமிழ் மக்களைக் கொன்றொழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே முப்படையும் கட்டமைக்கப்பட்டது.

தவிர, படையினர் தமிழ் மக்களைக் கொன்றால், அவர்களைச் சித்திரவதை செய்தால் அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குகின்ற அளவிலேயே கடந்த கால ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் இருந்தன. தவிர, படைத் தளபதிகளும் தமிழின அழிப்புக்காகவே படையினரை வழிப்படுத்தினர்.

இதன் காரணமாக இன்றுவரை இராணுவம் தமிழ் மக்களைத் தாக்குவதிலும் தமிழ் மக்களின் உயிர்களைப் பறிப்பதிலும் தீவிரமாக உள்ளதென்பதை முத்தையன்கட்டுச் சம்பவம் கோடிட்டுக் காட்டியுள்ளது.

ஆம், ஏழு மாதக் குழந்தையின் தந்தை, இராணவத்தின் தாக்குதல் காரணமாக உயிரிழந்திருப்பதென்பது எத்துணை அவலம் நிறைந்தது.

இளம் குடும்பஸ்தரை இழந்துள்ள அந்தக் குடும்பத்தின் எதிர்காலம் எப்படியாகவுள்ளது என்ற கேள்விகள் எதுவும் இராணுவத்தின் மனச்சாட்சியைச் சென்றடையாத அளவில், தமிழர்கள் என்றால், அவர்களைக் கொல்லுவதுதான் இராஜகாரியம் எனப் படையினர் நினைக்குமளவுக்கு அவர்களிடம் இனவாத நச்சு விதைக்கப்பட்டுள்ளது.

எனவே என்னதான் சமாதான விருப்போடு அநுரவின் அரசாங்கம் செயற்பட்டாலும் தமிழர் பிரதேசங்களில் படையினரின் பிரசன்னம் இருக்கும்வரை, அவர்களால் தமிழ் மக்களுக்கு ஆபத்து ஏற்படவே செய்யும்.

எனவே முத்தையன்கட்டுச் சம்பவம் தொடர்பில் உரிய நீதி விசாரணை நடத்தப்படுவதுடன் சம்பந்தப்பட்ட குடும்பத்துக்கு நட்டஈடும் வழங்கப்பட வேண்டும்.

மேலாக, தமிழர் தாயகத்தில் உள்ள இராணுவ முகாம்களை முழுமையாக அகற்றுகின்ற நடவடிக்கைகளையும் அநுர அரசு உடனடியாகச் செய்வது அவசியம்.

# மின்சார வசதியின்றி இடர்படும் குடும்பங்கள்

## தேவிபுரத்தில் ரவிகரன் எம்.பி ஆராய்வு

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் (ஆ) பகுதியில் மின் இணைப்பின்றி பலகுடும்பங்கள் அவதிப்படுகின்றன.

இந்நிலையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று மின் இணைப்பு இன்றி அவதிப்படும் குடும்பங்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் குறித்தும் மின் இணைப்பு வழங்கப்படாமைக்கான காரணம் குறித்தும் ஆராய்ந்தார்.

இதன்பின் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த ரவிகரன் எம்.பி,

மின் இணைப்பு இல்லாத குடும்பங்களுக்கு மின் இணைப்பினைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் தம்மால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இது குறித்து கலந்துரையாடப்படும் என்றார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களுடன் புதுக்குடியிருப்புப் பிரதேசசபை உறுப்பினர் சிவபாதம் குகநேசன் அவர்களும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,299)

# நாட்டில் இன்று மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

நாட்டில் இன்று (11) பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன் மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா, கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன்கூடிய மழையுடன் பலத்த காற்று வீசுவதுடன் மின்னல் தாக்கங்களால் ஏற்படும் அனர்த்தங்களைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் நேற்று குறைந்தபட்ச வெப்பநிலை நுவரெலியாவில் 12.7 டிகிரி செல்சியஸாகப் பதிவானதோடு அதிகபட்ச வெப்பநிலையாக மன்னாரில் 27.2 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 34

சொக்கன்

அதன்பிறகு பலநாடுகள் தங்கள் மண்ணில் இஸ்ரேலுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளை ஊக்குவிக்கத் தயங்கினார்கள்.

இதைப் பார்த்து உற்சாகமான இஸ்ரேல் அரசாங்கம் தங்களுடைய உளவுத்துறைக்கு இன்னும் பல அதிகாரங்கள் முக்கியப் பொறுப்புக்களை அள்ளி வழங்கியது. மொசாட்டின் பலம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருந்தது.

### மஞ்சள் கேக் மர்மம்

கங்க்ராஜுலேஷன்ஸ் ஜெனரல் யாரோ ஜ்வி ஜமீரின் கைகளை இறுக்கமாகப் பற்றிக் குலுக்கினார்கள். உங்கள் நாட்டுக்குத் திரும்பிப் போனதும் எங்களையெல்லாம் சுத்தமா மறந்துடுவீங்க தானே?


ஜெனரல் ஜ்வி ஜமீர் நாசூக்காகச் சிரித்தார். நானும் எவ்வளவு நாளைக்குத்தான் ஆர்மி யூனிஃபார்மலயே காலம் தள்ளமுடியும்? எனக்கும் கொஞ்சம் நிம்மதியா ரெஸ்ட் எடுக்கணும் என்று ஆசை இருக்காதா?

அப்போது ஜெனரல் ஜ்வி ஜமீருக்கு வயது நாற்பத்திச் சொச்சம் நிச்சயமாக ரிட்டையராகிற வயது இல்லை. ஊருக்குப் போய் என்ன செய்யப் போறீங்க ஜெனரல்?

டெக்ஸ்டைல்ஸ் பிஸினஸ் என்றார் ஜ்வி ஜமீர்.

அவர் இப்படிச் சொன்னதும் அங்கிருந்த பலருக்கு ஆச்சர்யம் ஒரு ராணுவ அதிகாரி அதுவும் ஜ்வி ஜமீர்போலச் சுறுசுறுப்பான பேர் வழியால் எப்படி ஜவுளித் தொழிலுக்குள் முடங்கிக் கிடக்கமுடியும்? நம்பமுடியவில்லையே!

அவர்கள் சந்தேகப் பட்டது சரிதான் .இஸ்ரேல் வட்டாரங்களில் டெக்ஸ்டைல்ஸ் பிஸினஸ் என்றால் ரகசியம் என்று அர்த்தம்.



இந்த விடயம் தெரிந்தவர்கள் தங்களுக்குள் குறும்பாகச் சிரித்துக் கொண்டார்கள். ஜ்வி ஜமீர் இஸ்ரேலில் ஏதோ விவகாரமான வேலையில் இறங்கப்பொகிறார். இந்த மக்குப் பயல்களுக்கு அது புரியவில்லை. அவர் சட்டை பேன்ட் சல்வார் கமீஸ் வியாபாரம் செய்யப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

சில நாட்கள் கழித்து ஜ்வி ஜமீர் லண்டனில் இருந்து இஸ்ரேல் வந்து சேர்ந்தார். மொசாட்டின் புதிய தலைவராகப் பொறுப் பேற்றுக் கொண்டார்.

உடனடியாக அவருக்கு அரசாங்கத்திடமிருந்து அழைப்பு வந்தது. எங்களுக்கு இருநூறு தொன் மஞ்சள் கேக் வேணும் ஏற்பாடு செய்யுங்கள்.

மஞ்சள் கேக்கா? அது என்ன ? ஏதாவது சாப்பிடுகிற பொருளா? அதற்கும் மொசாட் தலைவர் ஜ்வி ஜமீருக்கும் என்ன சம்பந்தம்? அரசாங்கத்துக்கு இருநூறு தொன் கேக் சுட்டுத்தர அவர் என்ன பேக்கரியா நடத்துகிறார்? டெக்ஸ்டைல்ஸ் போலவே மஞ்சள் கேக்கும் ஒரு ரகசியக் குறியீடுதான் அறிவியல் மொழியில் இதை யுரேனியா என்று சொல்வார்கள்.

இதிலிருந்து யுரேனியம் எனப்படும் அணு ஆராய்ச்சிக்கான பவர் ஃபுல் மூலப்பொருளைப் பிரித்தெடுக்கமுடியும்.

கொஞ்சம் நமக்குப் புரியும்படி சொல்வதென்றால் தங்கத்தை எப்படிப்பூமியிலிருந்து வெட்டி எடுக்கிறார்கள் என்று யோசித்துப்பாருங்கள்.

மண்ணைத் தோண்டி எடுக்கப்படுகிற தங்கத்தாது தகதகவென்று மின்னாது அதனுடன் மண் ஏகப்பட்ட அசுத்தங்கள் கலந்து இருக்கும். இதையெல்லாம் பல்வேறு ரசாயனமுறைகளில் சுத்தப்படுத்தி ஜொலிக்கும் தங்கக் கட்டிகளாக மாற்றுகிறார்கள்.

யுரேனியமும் அப்படிதான். இயற்கையாகக் கிடைக்கும் யுரேனியத் தாதுவைப் பல வழிகளில் சுத்திகரித்து யுரேனியா அதாவது மஞ்சள் கேக்காக மாற்றவேண்டும். பிறகு இதிலிருந்து சுத்தமான யுரேனியம் பிரித்தெடுக்கப்படுகிறது.

அதாவது முதலில் யுரேனியத்தாது அதிலிருந்து மஞ்சள் கேக் அதிலிருந்து யுரேனியம் அதிலிருந்து அணுகுண்டு ஓகேயா?

கெமிஸ்ட்ரி பாடம் போதும் மறுபடியும் மொசாட் சமாசாரத்துக்குத் திரும்புவோம்.

இஸ்ரேலுக்கு எதற்கு மஞ்சள் கேக்? அதுவும் இருநூறு தொன்? அவ்வளவு யுரேனியத்தை வைத்துக்கொண்டு அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

இந்தக் கேள்விக்கு இன்னொரு கேள்விதான் பதில்: பயில்வான்கள் வாழும் காலனியில் ஒரு நோஞ்சான் பையன் குடிவந்தால் அவனுடைய கதி என்ன ஆகும்?

அன்றைக்கு இஸ்ரேலின் நிலைமை அப்படித் தான் இருந்தது. சுற்றியுள்ள மற்ற நாடுகளோடு ஒப்பிடும் போது இஸ்ரேலின் ராணுவ பலம் மிகவும் குறைவு இவர்கள் தனித் தனியாகச் சண்டைக்கு வந்தாலே சமாளிப்பது சிரமம்.

எல்லோரும் கூட்டுச் சேர்ந்துவிட்டால் வேறு வினையே வேண்டாம். எல்லாத் திசைகளில் இருந்தும் ஒரு நேரத்தில் முற்றுகையிட்டு இஸ்ரேலைக் கொத்துபரோட்டா போட்டுவிடுவார்கள்.

இஸ்ரேல் யோசித்தது. நாம் இப்படி நோஞ்சானா இருக்கிறதாலதானே எல்லாரும் சீண்டிப் பார்க்கிறாங்க? நம் கையில் கத்தி இருக்கு, துப்பாக்கி இருக்கு வெடிகுண்டு இருக்கு என்று தெரிஞ்சா அப்பறம் அநாவசியமா வாலாட்ட மாட்டாங்க தானே?

உடனடியாகத் தன்னுடைய ஆயுத பலத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் இறங்கியது இஸ்ரேல் தனது நட்பு நாடுகளின் உதவியுடன் நவீன குண்டெறி விமானங்கள் பீரங்கிகள் போர்க்கப்பல்கள் துப்பாக்கிகள் வெடி பொருட்கள் என்று ஏகப்பட்ட சமாசாரங்களை வாங்கிக் குவித்தார்கள்.

இதனால் வேறொரு பெரிய பிரச்சினை முளைத்தது. இவர்களுக்கு ஆயுத சப்ளை செய்யும் தாதாக்கள் பதிலுக்கு இஸ்ரேல் தங்களுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். எங்களை மீறி ஏதாவது செய்தீர்கள் என்றால் அப்புறம் உங்களுக்கு ஆயுதம் தரமாட்டோம் என்று மிரட்டினார்கள். தவிர இஸ்ரேல் வாங்கிச் சேர்க்கிற ஆயுதங்கள் எல்லாமே அக்கம் பக்கத்துப் பங்காளிகளிடமும் நிறைய இருக்கின்றன. அவர்களை மிஞ்சி இஸ்ரேல் பெரிய ஆளாக வேண்டுமென்றால் அந்த நாடுகளிடம் இல்லாத ஒரு பிரம்மாஸ்திரம் இஸ்ரேலுக்கு வேண்டும். இப்படி இஸ்ரேல் தேர்ந்தெடுத்த பிரம்மாஸ்திரம் அணுகுண்டு!

இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பான் மீது அமெரிக்கா இரண்டு அணுகுண்டுகளை வீசியிருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா பொதுச்...

ஜப்பானுக்கும் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இதுகுறித்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது,

செப்ரெம்பர் 23ஆம் திகதி ஜனாதிபதி அநுர அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளதோடு, 24ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றவுள்ளார். வெளியுறவுக் கொள்கை உட்பட தமது அரசாங்கத்தின் கொள்கைகளை இதன்போது ஜனாதிபதி கோடிட்டுக் காட்டுவார். அமர்வுகளின் போது பல நாட்டுத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பொதுச்சபை அமர்வுகள் நிறைவடைந்ததன் பின் நியூயோர்க்கிலிருந்து, ஜனாதிபதி அநுர செப்ரெம்பர் 27 அன்று ஜப்பானின் ஒசாகாவிற்கு எக்ஸ்போ 2025 இல் கலந்துகொள்வதற்காகவும் ஜப்பானுக்குப் பயணம் செய்யவுள்ளார்.

அங்கு அந்நாட்டின் கலாசாரம், சுற்றுலா, வர்த்தகம் ஆகியவற்றை பார்வையிடுவதோடு மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்தவுள்ளார். (ந-7)

## சர்வதேச...

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் குழுவின் தலைவராக விஜித ஹேரத் செயற்படவுள்ளார்.

இந்நிலையிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பான ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது செம்மணி விவாகரத்தில் சர்வதேச விசாரணை இடம் பெறுமா? என ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ள அமைச்சர்,

செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான விசாரணைகள் இலங்கையின் சுயாதீன நீதித்துறையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இங்கு எதுவித அரசியல் தலையீடும் இல்லை.

செம்மணி போன்றே மன்னார், மாத்தளை பகுதிகளிலும் புதைகுழிகள் இனங்காணப்பட்டுள்ளன. அங்கும் அகழ்வுகளை முன்னெடுக்க எமது அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. இந்த விடயங்களில் நாம் வெளிப்படைத்தன்மையுடனே செயற்படுகின்றோம் என்றார். (ந-7)

## குற்றப்...

ரத்ன ராஜபக்ஷவின் மனைவி தெரிவித்தார்.

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, அப்படுகொலை மற்றும் செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் என்பன தொடர்பில் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும் இவ்விவகாரம் தொடர்பில் மீண்டுமொரு சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீதியமைச்சர் உள்ளிட்டோருக்கு அண்மையில் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இவ்விடயத்தில் சோமரத்ன ராஜபக்ஷவின் நிலைப்பாடு தொடர்பில் அவரது மனைவி செனாலி சம்பா விஜேவிக்ரம மற்றும் அவரது சகோதரி ரோஹினி ராஜபக்ஷ ஆகியோர் சோமரத்னவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினர்.

அதன்படி பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமியைக் கைது செய்து பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி படுகொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தனது கணவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அது மிகப்பாரதூரமான குற்றச்சாட்டு எனவும் அக்குற்றத்தைப் புரியாத தனது கணவர் 29 வருடகாலமாகத் தண்டனை அனுபவித்து வருதாகவும் அவரது மனைவி செனாலி சம்பா விஜேவிக்ரம சுட்டிக் காட்டினார்.

அதேபோன்று தாம் நாட்டையும் இராணுவத்தினரையும் காட்டிக் கொடுப்பதற்குத் தயாரில்லை எனக் குற்றஞ்சாட்டுகின்ற போதிலும் தாம் நாட்டைக் காட்டிக்கொடுக்கவில்லை எனவும் மாறாகத் தனது கணவருக்கும் அவருடன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஏனைய நால்வருக்குமான நீதியையே கோருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை இவ்விடயத்தில் நாட்டுக்குள் தமக்கான நீதி கிடைக்காவிடின், தாம் சர்வதேச விசாரணையின் ஊடாகவே நீதியைக் கோரவிருப்பதாகவும் அரசாங்கம் தமக்கு எவ்வித நிவாரணத்தையும் அளிக்காத நிலையில், தனது சகோதரர் சர்வதேச விசாரணையில் சகல விடயங்கள் தொடர்பிலும் சாட்சியம் அளிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் ரோஹினி ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி சோமரத்ன ராஜபக்ஷவின் அறிவிப்பை அடுத்து குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்தாலும் அவர் அவ்வதிகாரிகளிடம் எதனையும் கூறமாட்டார் என்றும், கடந்த காலங்களில் உண்மையைக் கூறிய போதிலும் நீதி கிட்டாததன் விளைவாகத்தாம் அக்கட்டமைப்புக்கள் மீது நம்பிக்கை இழந்திருப்பதாகவும் சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி விளக்கமளித்தார்.

மேலும் தனது கணவர் மீதும், ஏனைய நால்வர் மீதும் சுமத்தப்பட்ட மிகமோசமான குற்றத்தைப் புரிந்தவர்கள் வெளியே சுதந்திரமாக இருப்பதாகவும், அக்குற்றத்தைப் புரியாதவர்கள் 29 ஆண்டுகள்சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்ட செனாலி சம்பா விஜேவிக்ரம, தற்போது தனது கணவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கையையும், தமக்கான நீதியையுமே தாம் எதிர் பார்ப்பதாகத் தெரிவித்தார். (ந-7)

## உயிரி...

மருத்துவ அதிகாரியினால் குறித்த உடற்கூற்றுப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது இறப்புக்கான காரணத்தை கண்டறிய முடியாமையால் உடற்கூற்று மாதிரிகளைப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உயிரிழந்தவரின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## வாகன விபத்தில்...

டார் சைக்கிளும் எதிர்த்திசையில் பயணித்த காரும் விபத்துக்குள்ளாகியதில் இந்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இயக்கச்சிப் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்தவராவார்.

விபத்துத் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2025.08.10
சீட்டிழுப்பு இலக்கம் 5917
K 1 0 1 3 2 6

அத சம்பத
K 1 3 2 6
சீட்டிழுப்பு இலக்கம் 0492
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.08.10
0033
கடகம் 09 10 16 49

தன நிதானய
திகதி - 2025.08.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1947
P 06 44 64 67 P
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance 12197

மெகா பவர்
திகதி 10/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2265
J 25 08 34 50 60

ஜய
திகதி 2025.08.10
சீட்டிழுப்பு இலக்கம் 0185
F 5 0 7 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4159
சீட்டிழுப்பு திகதி 10.08.2025
H 32 45 70 76
H

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.10
சீட்டிழுப்பு இலக்கம் 1226
இடபம் 07 11 35 61 இடபம்
33831

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிர் தன சம்பத
10.08.2025 வெற்றி வாரம் 0625
K 0 5 9 7 7 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,683,175.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2891
சீட்டிழுப்பு திகதி 2025.08.10 தினம் ஞாயிற்றுக்கிழமை
13 23 42 52 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,860,747.20

சனிதா
திகதி 10.08.2025 வெற்றி வாரம் 5052
02 35 46 64 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,631,012.80

சசிரி
745
10.08.2025 ஞாயிற்றுக்கிழமை
09 17 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4603
சீட்டிழுப்பு திகதி 10.08.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
19 46 47 48 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,246,349.20

லக்ன வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 19 15 42 59 67
2067
10.08.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.587,052,224.00

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2717
சீட்டிழுப்பு திகதி: 2025.08.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,566,342.40
02 39 45 48 C


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செப்.8இல் ...

உயர்ஸ்தானிகரால் பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகி அக்டோபர் மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

தற்போது நடைமுறையில் இருக்கும் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்ற தீர்மானத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான விரிவான எழுத்துமூல அறிக்கை கூட்டத்தொடரின் ஆரம்ப நாளான 8 ஆம் திகதி உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கினால் பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

அதேவேளை இலங்கை தொடர்பில் நடைமுறையில் இருக்கும் இத்தீர்மானம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் முடிவுக்குவரும் நிலையில் இலங்கை தொடர்பில் புதிய தொரு தீர்மானத்தைக் கொண்டு வர விருப்பதாக பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகள் ஏற்கனவே அறிவித்துள்ளன.

இருப்பினும் அத்தீர்மானத்தின் திருத்தப்படாத வரைபு மற்றும் அதன் மீதான வாக்கெடுப்புக்கான திகதி என்பன இன்னமும் வெளியாகவில்லை. இது இவ்வாறிருக்க பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை சார்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழுவினர் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மலேரியாவால் ...

முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவைச் சேர்ந்த 38வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஐரோப்பிய நாடொன்றுக்கு செல்லும் நோக்குடன் ஆபிரிக்க நாட்டில் சிலகாலம் தங்கியிருந்த நிலையில் ஐரோப்பிய நாட்டிற்குச் செல்லும் முயற்சி கைகூடாத நிலையில் கடந்த 2 ஆம் திகதி மீண்டும் நெடுந்தீவை வந்தடைந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 4 ஆம் திகதி கடுமையான நடுக்கம், மாறாட்டம் போன்ற அறிகுறிகளுடன் இரவு 10.30 மணிக்கு நெடுந்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து யாழ்.போதனா வைத்திய சாலைக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு உரிய சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மலேரியாவிற்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவருக்கு பிளாஸ்பாரம் மலேரியா (Falciparum malaria) இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அவருக்கு உடனடியாகவே மலேரியா நோய்க்கான ஊசி மருந்துகள் நாளத்தின் ஊடாக ஏற்றப்பட்டது.

தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்ட மலேரியாவிற்கான குருதிப் பரிசோதனையில் ஆகஸ்ட் 7 ஆம் திகதி அவரது குருதியில் மலேரியா கிருமிகள் முற்றாக அழிக்கப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டது.

ஆயினும் அவருக்குக் காணப்பட்ட பல்வேறு நோய் நிலைகளால் அவர் சுய நினைவற்ற நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

அந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ந-7,33)

## இரத்ததான முகாம்

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் அறிவுறுத்தலுக்கு அமைவாகச் சங்கானைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் விசேட இரத்ததான முகாமானது இன்று திங்கட்கிழமை (11.08.2025) காலை 09 மணி முதல் சங்கானைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-7)


## மணப்பெண் தேவை

01. மாதகல், இந்து, 1986, பரணி, LLB (UK), Attorney at law, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 54132
02. புத்தூர், இந்து, 1989, கேட்டை, BSc (Jaffna University) மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 53868
03. சாவகச்சேரி, இந்து, 1993, ஆயிலியம், BMA (Jaffna University) HRM, Diploma in hardware Engineering (UK) Bank Officer மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 53840
04. சித்தங்கேணி, இந்து, 1984, உத்தராடம், BSc in Software Engineering மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.53835
05. மானிப்பாய், இந்து, 1995, புனர்பூசம், BA in English (Jaffna University) Bio medical Science (Bcas) Goverment Officer Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 53728
06. மாங்குளம், இந்து, 1994, பரணி, MBBS FLAP Reading (UK) MBBS Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 48027
07. அனலைதீவு, இந்து, 1989, ஆயிலியம், BSc Appiled Science (Jaffna University), BSc in Quantity Surveying (Brimingham city University) மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 46491
08. நீர்வேலி - காரைநகர், இந்து, 1991, திருவோணம், B Engineer (Software), Data Engineer, Netherland Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 54135
09. சண்டிலிப்பாய் - தாவடி, இந்து, 1983, ரேவதி, MSc, Bachelor of Engineering UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 51761
10. மட்டுவில், இந்து, 1985, கேட்டை, B Eng (Hons) Computer Network Engineering (University of east london), UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 51409

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728 (5002)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3623)

076 825 7716 (ஆகாஸ்)


## விற்பனையாளர் தேவை

எமது ஜவுளி நிறுவனத்திற்கு வியாபார அனுபவம் உள்ள அல்லது தொழில் பழக ஆர்வம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை. (5016)

சிவகணேசன் TEX
41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
1950 . 09 . 03



ஆண்டவன் அடியில்
2024 . 07 . 23

### அமரர் திரு.கதிர்காமு ஆறுமுகம்

ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஆறாது எம் துயரம் அப்பா!
நீங்கள் இல்லா வெற்றிடத்தை - ஒவ்வொரு நாட்களும்
எமக்கு உணர்த்துகிறது அப்பா!
உங்கள் நினைவுகளுடன் என்றும்
எம் வாழ்க்கை நகரும் அப்பா...
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர்
மலர் தூவி அஞ்சலி செய்கின்றோம்.

துறையா மூலை,
மந்திகை

என்றும் உங்கள் நினைவுகளுடன்.. பிள்ளைகள்
[illegible]

(C-3624)


## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2660/- |
| 21-27 Kg | 2480/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery (C-3622)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241, 076 822 6237

## பெண் பணியாளர் தேவை

புற்றுநோயிலிருந்து தேறிவரும் எனது மனைவியை வீட்டில் தங்கியிருந்து கவனிக்க 40 வயதிற்கு மேற்பட்ட பெண் பணியாளர் தேவை.

071 847 5539

## பணிப்பெண் தேவை

மாதகலில் அமைந்துள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வீட்டு வேலை மற்றும் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. (1430)

- தங்கி நின்று பணியுரிதல் வேண்டும்.
- 45 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
- சம்பளம் 40,000/=

076 695 8498

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு (C-3622)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## வெளிநாட்டில் (canada) இல்வசிக்கும் மணமகள்களுக்கு மணமகன்கள் தேவை

1981(Divorce), 1990, 1990(Divorce), 1993, 1995(02), 1997, 1999, ஆண்டுகளில் பிறந்த மணமகள்களுக்கு உள்ளூர் மணமகன்கள் தேவை. (5015)

077 041 3462, 077 408 8241


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org